# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜுூன் 2007 ஜீவியம் 13 மலர் 2

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் | 2 |
| இம்மாதச் செய்தி | 8 |
| ஆன்மீகத்துடன் இணைந்த வளம் | 9 |
| உலகம்-மோட்சம்-ஸ்ரீ அரவிந்தம் | 12 |
| சாவித்ரி | 27 |
| சுனாமி - பறவைகளின் நுண்ணறிவு | 29 |
| ஆன்மீகம் மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 38 |
| அன்பர் கடிதம் | 41 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 42 |
| புது வரவு | 46 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 50 |
| பேப்பர் கிளிப்பைக் கொடுத்து ஒருவர் இரண்டு மாடி வீடு பெற்றார் | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

- ✡ யோகவாழ்க்கைஎனும் நூல் *The Life Divine* தத்துவங்களை வாழ்க்கைக்கு ஏற்றவாறு மாற்றி வழங்குகிறது. இந்நூலைப் பிரித்துப் பார்த்தால் என்ன செய்யலாம் என்பதைச் சுட்டிக்காட்டும்.

- ✡ வருமானம் பெருக, செலவு பெருக வேண்டும்.

  செலவு பெருகாமல் வருமானம் பெருகாது. செலவே வருமானம்.

- ✡ மனத்தைக் கடந்து மண்டியிட்டு அடக்கமாக அருளைப் பெற்றால், அருள் பேரருளாகும். அடங்கி அன்பு செலுத்து; அருள் பேரருளாகும். அடங்கியபொழுது அழுக்கைமீறி அருள் செயல்படும்.

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XV. The Supreme Truth-Consciousness

The Supermind works otherwise. Page No.138
Suppose the tree was a separate existence. Para No.13
What would be the process?
The process cannot be the same.
Forms are determined by the cosmic existence.
In fact, it is fixed by its force.
In the cosmos there are other manifestations.
The tree has its relations with them.
The growth of the tree is determined by all of them.
There is a universal law and truth of all Nature.
The separate law is one application of the universal law.
There is the general development.
There is the particular development.
The one is determined by the other.
The tree does not explain the seed.
The seed does not explain the tree.
Cosmos explains both.
God explains cosmos.



## 15. உயர்ந்த சத்தியஜீவியம்

சத்தியஜீவியம் வேறு வகையாக வேலை செய்கிறது.
மரம் தனித்த அம்சம்எனக் கொள்வோம்.
எப்படி மரம் வளரும்?
அது வளரும் வழியோ, வாழும் வகையோ வேறு வகையாகும்.
ரூபங்களை நிர்ணயிப்பது பிரபஞ்ச வாழ்வு.
உண்மையில் அதன் சக்தியை நிர்ணயிப்பது அதுவே.
பிரபஞ்சத்தில் வேறு சிருஷ்டிகள் உண்டு.
மரத்திற்கு அவற்றுடன் தொடர்புண்டு.
மரத்தின் வளர்ச்சியை அனைத்தும் நிர்ணயிக்கின்றன.
பிரபஞ்சத்திற்குரிய சட்டமும், இயற்கைக்குரிய சத்தியமும் உண்டு.
குறிப்பிட்ட சட்டம் பிரபஞ்ச சட்டத்தின் ஓர் அம்சம்.
பொதுவான வளர்ச்சியுண்டு.
குறிப்பிட்ட வளர்ச்சியுண்டு.
ஒன்றை மற்றது நிர்ணயிக்கிறது.
மரம் விதையை விளக்காது.
விதை மரத்தை விவரிக்காது.
பிரபஞ்சம் இரண்டையும் விளக்கும்.
இறைவன் பிரபஞ்சத்தை எடுத்துச் சொல்வான்.

The Supermind pervades the tree and the seed.
It inhabits both.
It does so with all objects.
It lives in the greater knowledge.
It is indivisible and one.
It is a modified indivisibility and unity.
It is not an absolute unity.
This is comprehensive knowledge.
There is no independent centre of existence.
There is no individual separated ego.
We see that in ourselves.
It is self-aware.
To it the whole existence is an equable extension.
It is one in oneness.
It is one in multiplicity.
It is one in all conditions and everywhere.
Here the All and the One are the same existence.
The individual being has a conscious identity.
It is with all beings and with the One Being.
It cannot lose that identity.
That identity is inherent in supramental cognition.
It is a part of the supramental self-evidence.

The Supermind enjoys a spacious equality of oneness. Page No.139 Para No.14
The Being is not divided and distributed.
It is equally self-extended.
It pervades its extension as One.
It inhabits as One the multiplicity of forms.
It is everywhere at once the single and equal Brahman.



சத்தியஜீவியம் மரத்தையும் விதையையும் ஊடுருவும்.
இரண்டிலும் அது உறைகிறது.
எல்லாப் பொருள்களிலும் அது உள்ளது.
அதன் ஞானம் பெரியது.
அந்த ஞானம் தன்னைப் பகுக்க அனுமதிக்காத முழுமையுடையது.
அதன் முழுமை மாறிய முழுமை.
அடிப்படையான முழுமையன்று.
இது அனைத்தையும் உட்கொண்ட ஞானம்.
இங்கு தனியான வாழ்வு மையமில்லை.
அகந்தைஎன தனிப்பட்டது ஒன்றில்லை.
அதை நாம் நம்முள் காண்கிறோம்.
அது தன்னையறியும்.
அதற்கு முழுவாழ்வும் ஒரேமாதிரியான நீட்சி.
அது ஒருமையுடைய ஒன்று.
அனைத்திலும் ஒருமை பெற்றது.
எங்கும், எந்த நிலையிலும் அது ஒன்றே.
இங்கு அனைத்தும் ஒன்றும் ஒரே வாழ்வுடையது.
தனிஜீவன் தன்னையறியும்.
அந்நிலை அனைத்திற்கும் உண்டு. ஒன்றுஎன்ற ஏகனுக்கும் உண்டு.
அது தன் ஐக்கியத்தை இழக்கமுடியாது.
அந்த ஐக்கியம் சத்தியஜீவிய நோக்கில் பிறப்பிலேயேயுள்ளது.
அது சத்தியஜீவிய வாழ்வின் பகுதி.

சத்தியஜீவியத்திற்கு இடத்தில் சமத்துவம் உண்டு. அது ஒருமையின் சமத்துவம்.
ஜீவன் பகுக்கப்பட்டு, விநியோகம் செய்யப்படவில்லை.
ஜீவன் தன்னை பிரபஞ்சத்தில் நீட்டிக் காண்கிறது.
தன்னிலிருந்து நீண்டெழுந்தவற்றை அது ஏகஜீவனாக ஊடுருவுகிறது.
பல ஆயிரம் ரூபங்களை அது ஏகனாக அடைந்து வதிகிறது.
எங்கும் அது எளிய சமத்துவமான பிரம்மம்.

This extension of Being is in Time and Space.
This pervasion is in intimate relation with the absolute Unity.
So also is its indwelling.
It has proceeded from this Unity.
It is that absolute indivisible.
There is no centre in it or circumference.
Only the timeless spaceless One remains.
At the beginning there is the unextended Brahman.
There is that high concentration of unity.
It has to translate itself in the extension.
It becomes the equal pervasive concentration.
It becomes the indivisible comprehension of all things.
Also, it is this universal undistributed immanence.
This unity is undiminishing and unabrogated.
No play can tamper with that unity.
"Brahman is in all things."
"Brahman contains all things."
"All things are in Brahman."
This is the triple formula.
It is a formula of the comprehensive Supermind.
There is a single truth.
It is a truth of self-manifestation.
It emerges in three aspects.
It holds it together.
It does so inseparably in its self-view.
It is the fundamental knowledge.
It proceeds from it to the play of the cosmos.

*Contd....*

❀❀❀



இந்த நீட்சி காலத்திலும், இடத்திலும் ஏற்பட்டது.
இவ்வூடுருவல் பிரம்ம ஐக்கியத்துடன் நெருங்கிய தொடர்புள்ளது.
அதனுள் உறைவதும் அப்படியே.
இந்த ஐக்கியத்தினின்று அது புறப்பட்டு வெளிப்படுகிறது.
பகுக்கமுடியாத அந்த ஐக்கியம் பிரம்மத்திற்குரிய ஐக்கியம்.
அங்கு மையமில்லை, எல்லையான பரிதியில்லை.
காலத்தையும் இடத்தையும் கடந்த ஜீவன் மட்டுமே உள்ளது.
ஆரம்பத்தில் வெளிப்படாத பிரம்மம் மட்டுமேயிருந்தது.
ஐக்கியத்தின் தீவிரம் அங்குள்ளது.
அது நீட்சியில் அதற்குத் தகுந்தவாறு வெளிப்படவேண்டும்.
அது சமத்துவமுடைய ஊடுருவும் தீவிரமாகும்.
அது பகுக்கமுடியாத பரவலான ஞானமாகும்.
மேலும் அது பிரபஞ்சத்திற்குரிய விநியோகிக்கப்படாத உடன்பிறந்ததாகும்.
இது குறைவற்ற, குறைக்கமுடியாத ஐக்கியம்.
எந்த லீலையும் இந்த ஐக்கியத்திற்குக் குந்தகம் விளைவிக்க முடியாது.
"பிரம்மம் அனைத்திலும் உண்டு."
"பிரம்மம் அனைத்தையும் உட்கொண்டது."
"எல்லாம் பிரம்மம்."
மூன்று அம்சமுள்ள சூத்திரம் அது.
அது முழுமையான சத்தியஜீவிய சூத்திரம்.
இது ஒரு தனித்த சத்தியம்.
சுய-சிருஷ்டியின் சூத்திரம் இது.
இது மூன்று அம்சங்களாக வெளிப்படுகிறது.
மூன்றையும் இது சேர்த்துப் பிடிக்கிறது.
தன் சுயநோக்கில் அவை பிரியாமல் அணைத்துப் பிடிக்கிறது.
இது அடிப்படை ஞானம்.
இதிலிருந்து அது பிரபஞ்ச லீலைக்குப் போகிறது.

*தொடரும்....*

❀❀❀

## இம்மாதச் செய்தி

**பிரார்த்தனை ஜீவனிலிருந்து எழுந்தால் அற்புதம் அன்றாட நிகழ்ச்சியாகும்.**



## ஆன்மீகத்துடன் இணைந்த வளம்

என். அசோகன்

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையை எதிர்த்து மார்ட்டின் லூதர் தன்னுடைய மத நம்பிக்கைகளை வெளியிட்டபொழுது அதை ஒரு பெரிய புரட்சியாக மாற்றியது அப்பொழுது புதிதாக எழுந்திருந்த அச்சுத் தொழில்தான். புதிதாகத் தோன்றிய அச்சுக்கூடங்கள் ஆயிரக்கணக்கான பைபிள் பிரதிகளைப் பொதுமக்கள் கையில் கொண்டு சேர்த்தன. சிறிது காலத்திலேயே பல நூற்றாண்டுகளாக ஓங்கி வளர்ந்திருந்த ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை தன்னுடைய பக்தர்களில் பாதிப் பேரை லூதர் துவக்கிவைத்த சீர்திருத்த இயக்கத்திற்கு இழந்தது. பெரிய புரட்சிகளுக்குப் பின்னால் மக்களின் அபிப்பிராயங்களை மாற்றும் சக்தி படைத்த பத்திரிகைகள் இயங்கியிருக்கின்றனஎன்பது பரவலாகத் தெரிகின்ற உண்மையாகும்.

நாளேடுகள், வாரப்பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிச் சேனல்கள் தற்பொழுது பெருகியுள்ளன. சுதந்திரப் போராட்டத்தின்பொழுது இவை செய்த வேலையை இப்பொழுது செய்யத் தேவையில்லை. அதாவது சுதந்திர வேட்கையை இப்பொழுது தூண்டத் தேவையில்லை. மாறாக மக்களின் சுபிட்ச வேட்கையைத் தூண்ட, பத்திரிகை உலகம் பாடுபடலாம். செய்தித்தாள்கள் தற்பொழுது வெறும் செய்தியைமட்டும் தருகின்றன. சுபிட்சத்தை நாடும் மக்களின் ஆர்வத்தைப் பூர்த்திசெய்யும் வகையில் இவை செயல்படுவதில்லை. சுபிட்ச வேட்கையைத் தூண்டுவது போக இந்நாட்டின் பழம்பெரும் ஆன்மீகச் சிறப்பை மீண்டும் நிலைநாட்டும் வகையிலும் பத்திரிகைகள் செயல்படலாம். ஞானமும், விவேகமும் நிறைந்த அறிவாளிகள் இந்நாட்டில் நிறையப்பேர் உள்ளனர். வருங்காலத்தில் சடங்குகளுக்கு முக்கியத்துவமில்லை. ஆன்மீகச் சாரம்தான் கருதப்படும் என்பதை இந்த அறிவாளிகள் உணர்ந்துள்ளார்கள்.

நவீன வாழ்க்கையை பழைய ஆன்மீகச் சிறப்புகளுடன் இணைத்து வாழ்வதெப்படிஎன்பதை விளக்கி இவ்வறிஞர்கள் பத்திரிகைகளில் நிறைய எழுதலாம். வாழ்க்கையை வெறுத்து ஒதுக்குவதுஎன்பது சரியில்லை. கீதோபதேசம் சிறந்ததுஎன்றாலும் அதன் இறுதி உபதேசம், வாழ்வைத் துறந்து மோட்சத்தை நாடுவதாக அமைகிறது.

வாழ்க்கையையும் ஆன்மீகத்தையும் இணைத்து எப்படி வாழ்வை வளப்படுத்துவது? இந்தியர்களின் சுபாவத்தில் அடிப்படையில் ஆன்மீகம் இருக்கிறது. அதை வெளிக்கொண்டுவரும் நற்பணியை, பத்திரிகை உலகம் செய்யலாம்.

பத்திரிகை நிருபர் இதன்பொருட்டு எந்தச் செய்தியைத் தேடுவதுஎன்ற கேள்வியை எழுப்பலாம். பொதுவாக, சாதித்தவர்களைப் பற்றி நிறைய செய்திகள் வருகின்றன. ஒவ்வொரு சாதனைக்குப் பின்னும் ஓர் ஆன்மீகப் பண்பு செயல்படுகிறது.

ஒரு விவசாயி அமைச்சரானார். அதற்குமுன்பு தினமும் காலையில் எழுந்து அவர் தம்முடைய நிலத்தைச் சுற்றிப் பார்ப்பது வழக்கம். அமைச்சரான பின்பும் தம் நிலத்தைக் கவனிப்பதை அவர் நிறுத்தவில்லை. சமூக அந்தஸ்தைத் தாண்டி உடமைகளுக்குக் கவனம் செலுத்தும்பொழுது அக்கவனம் ஓர் ஆன்மீகச் சிறப்பைப் பெறுகிறது. சாதித்தவர் மாணவனா-கவோ, விளையாட்டு வீரராகவோ, கலைஞராகவோ, அரசியல்வாதியாகவோ எத்துறையிலிருந்தாலும் இவ்வுயர்விற்குப் பின்னால் அதற்கு ஆதரவளிக்கும் வகையில் ஓர் ஆன்மீகப் பண்பிருக்கும். அப்பண்பு கட்டுப்பாடாகவோ, பக்தியாகவோ, ஆர்வமாகவோ எந்த ரூபத்தில் இருந்தாலும் அதற்கோர் ஆன்மீக வலிமையுள்ளது.

இன்று நாட்டில் ஊழல் மலிந்திருக்கலாம். ஆனால் இது நிலைத்துநிற்க முடியாது. எல்லா மேலைநாடுகளும் சுபிட்சமடைந்த தொடக்க காலத்தில் ஊழலைச் சந்திக்கத்தான் செய்தன. படிப்பறிவு வளர்ந்து, நாட்டில் சுபிட்சம் பரவி நிலைத்துநிற்கும்பொழுது ஊழலும் படிப்படியாகக் குறைந்து ஒரு கட்டத்தில் மறைகிறது. அப்பொழுது இறுதியில் வெற்றிபெறுவது மனிதனின்



ஆன்மீகப்பண்புகள்தாம். இத்தகைய பண்புகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பத்திரிகை உலகம் செயல்படவேண்டும்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நாம் சமூகத்தை முழுமையாக நம்பியிருக்கிறோம்என்ற பூரண சமூக அறிவைப் பெறுதல், சமூகத்தில் உயர்ந்த அடக்கம் பெறுவதாகும்.

***மனிதன் சமூகத்திற்கு உட்பட்டவன்என்பது உயர்ந்த தன்னடக்கம்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மற்றவர் வாழ்வு மலர்வதில் மகிழும் மனிதனுக்கு உறவு என்று தனியாக ஒன்றில்லை.

***உறவைக் கடந்த மலர்ச்சி.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தன் முக்கியத்துவத்தை விட்டுக்கொடுத்து, சரணாகதியை ஏற்பது மனிதனுக்குப் பெரிய முன்னேற்றம். அதை ஒரு முறையாகக் கண்டுபிடித்தவர் பகவான். பூரணயோகத்திற்கு அது முக்கியம்.

***சரணாகதியை ஏற்றால் மனிதனைவிட்டு இறைவனை ஏற்கிறோம்.***

# உலகம்–மோட்சம்–ஸ்ரீ அரவிந்தம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

- தெய்வீக ஆன்மா பிரம்மத்தின் முன்னிலையை விட்டகல்வது இல்லை.
- பிரம்மத்தையும், பிரம்மம் ஜீவன்களில் உறைவதையும், ஜீவன்கள் பிரம்மத்திலிருப்பதையும், பிரம்மம் ஜீவனில் ஜீவனுக்குத் தனித்தன்மை தருவதையும் தெய்வீக ஆன்மா சிந்தனையாலும், உள்ளுணர்வாலும், உணர்வாலும் அறிகிறது.

  தெய்வீக ஆன்மா மூன்று விஷயங்களை அறியும். அவை,

  1) Self பிரம்மத்தால் அத்தனை ஜீவாத்மாக்களும் ஆனவை.
  2) அத்தனை ஜீவாத்மாக்களும் self, பிரம்மம், இறைவனில் உள்ளன.
  3) பிரம்மம் அத்தனை ஜீவாத்மாக்களுள்ளும் உள்ளது.

  அறிவு என்பதற்கு 3 நிலைகள் உண்டு. அவை, (1) சிந்தனை, (2) உள்ளுணர்வு, (3) உடல் உணர்வு. சிந்தனை மனத்திற்கும், உள்ளுணர்வு emotions உணர்வுக்கும், உடல் உணர்வு உடலுக்கும் உரியது. இம்மூன்றாம் நிலையை எட்டினால் அறிவு பூரணம் பெறுகிறது. மனிதன் இவற்றை மனிதனாக அறியலாம், தெய்வமாக அறியலாம். தெய்வீக ஆன்மா இம்மூன்று நிலைகளையும் தெய்வீகமாக அறிகிறது.

- வேதம் இம் மூன்று நிலைகளையும் கடவுள்களுக்குக் கொடுக்–கிறது.

  அக்னி அனைத்துக் கடவுள்கட்கும் தலைவன்.

  எல்லாக் கடவுள்களும் அக்னியில் சேர்கின்றனர்.

  அக்னி மற்ற கடவுள்கட்குச் சேவகன்.



## மனமும் சத்தியஜீவியமும்

- உலகத்தை சிருஷ்டித்த செயலை இறைவனுக்குப் புறம்பானது என நாம் கருதுகிறோம்.
- சத்தியஜீவியம் இரண்டாகப் பிரியும் பொழுது மனம் உற்பத்தி ஆயிற்று.
- மனம் பிரிவினையாலுண்டானது. இது பிரிக்கும் கருவி.

  மனம் பிரிப்பது; முடிவற்றது. அணுவாகும்வரை பிரிக்கிறது.

  இனி பிரிக்க முடியாத நிலையில் சேர்க்கிறது.

  **பிரிவினையும் சேர்ப்பதும் ஒன்றே.**

- அடிமனம் மேல்மனத்தை ஆள்வதை அறிவது முதல் சித்தி.

  இது பிராணமயப் புருஷன்.

- மனத்திற்குரியது மனோமயப் புருஷன்.

  மனோமயப் புருஷனுக்கும் மனத்தின் அறியாமையுண்டு.

## வாழ்வு

- உறுதி சக்தியில் மறைந்தால் ஜடம் உற்பத்தியாகிறது.
- வாழ்வு உடல் உணர்வை மனத்திற்குக் கொண்டு போய் எண்ணமாக மாற்றி, அந்த எண்ணத்திற்கு உடலை கட்டுப்–படுத்துகிறது.
- ஆழ்மனம்என்பது சக்தி மறைவதால் ஏற்படுவது.

## மரணம், ஆசை, இயலாமை

- மரணம் வாழ்வுக்கு அமரத்வம் தருகிறது.
- பசி அன்பாக மாறும் இடையில் ஏற்படுவது ஆசை.
- இயலாமை பிணக்கால் இருபுறத்தையும் உயர்த்தி அன்பை

உற்பத்தி செய்கிறது.

– பிரபஞ்சத்தில் வாழ்வு தன்னை வலியுறுத்த மரணம், ஆசை, பிணக்கைப் பயன்படுத்துகிறது.

*1)* மரணம் - வாழ்வு*:*

மரணத்தால் உடல் அழிகிறது. ஆன்மா அடுத்த உடலில் ஜனிக்கிறது. அழிவது ஓர் உடல். ஆனால் உலகில் 'உடல்' அழிவதில்லை. ஒரு ரூபத்தில் அழிந்தவுடல், அடுத்த ரூபத்தில் எழுகிறது. அவ்வகையில் 'உடலு'க்கு நித்தியத்துவம், அமரத்துவம் தருகிறது. ஓர் ஆபீசர் மாற்றப்படுகிறார். அடுத்தவர் வருகிறார். ஆபீசர்கள் மாறுகிறார்கள். ஆபீஸ் நிலையாக இருக்கிறது. அவருக்கு வேறு போஸ்டிங் வந்தது*;* வேலை போகவில்லை. வேலைக்கு நிரந்தரம் தருவது மாற்றல். **உடலுக்கு அமரத்துவம் தருவது மரணம்.** ஒரே ஆபீசர் ஒரே ஊரிலிருந்தால் இலஞ்சம் ஏற்பட வழியாகும். ஒரே உடல் அமரத்துவமடைந்தால் வளரும் ஆன்மாவுக்குரியத் தகுதியை அதனால் தரமுடியாது. ஒரு பிறவியில் ஆன்மா பெற்ற அனுபவத்தை அப்பிறவியில் உடல் ஆதரித்தது. ஆன்மா வளர்ந்தபின் அவ்வுடல் தொடர்ந்து சேவை செய்ய முடியாது. பள்ளி முடித்த பையன் கல்லூரி போகவேண்டும். படிப்பை பள்ளியி-லேயே தொடர முடியாது.

*2)* பசி - அன்பு*:*

வாழ்வுக்கு மனத்தைப்போல், உடலைப்போல் வேகம் உண்டு. உடலின் வேகம் செயலுக்குரியது. மனத்தின் வேகம் அறிவை நாடும். வாழ்வின் வேகம் பசியில் ஆரம்பித்து அன்பில் முடியும். வாழ்வின் வேகத்தை ஆசை எனலாம். வாழ்வு சிறியது முதல் பெரியதுவரை நீடிக்கும். சிறியதற்கு வேகம் எழுந்தால் எடுத்துக் கொள்ளப் பிரியப்படும்*;* முயலும். பெரியதற்கு வேகம் வந்தால் கொடுக்கப் பிரியப்படும். எடுத்துக்கொள்வது பசி. கொடுப்பது அன்பு. பசியும், அன்பும் வாழ்வின் சிறிய முனையிலும், பெரிய முனையிலும் உள்ள ஆசை.



*3)* இயலாமை - பிணக்கு*:*

முடிந்தவன் செய்வான். முடியாதவன் சண்டையிடுவான். பிணக்கில் இரு புறம் உண்டு. பிணக்கால் இரு புறமும் ஓரளவு அனுபவம் பெறும். அதனால் உயரும். உயர்வதால் ஏற்படுவது அன்பு.

*4)* வாழ்வு வலியுறுத்துவது (self-affirmation)*:*

வாழ்வுக்கு மேல் மனமும், கீழே உடலும் உள்ளன. வாழ்வு உயிருடனிருப்பது வாழ்வுக்கு அவசியம். மரணம் வாழ்வுக்கு அமரத்துவம் தருகிறது என்றோம். ஆசையும், பிணக்கும் அன்பை உற்பத்தி செய்ய இருக்கின்றன.

- வாழ்வு உயிருடனிருக்க மரணம் அவசியம்.
- வாழ்வு தன் பரிணாமக் கடமையைச் செய்ய ஆசையும், பிணக்கும் அவசியம்.
- வாழ்வின் கடமை உடல் உணர்வை மனத்திற்குக் கொண்டுபோய் எண்ணமாக மாற்றி, அவ்வெண்-ணத்தின் ஆட்சிக்குள் உடலைக் கொண்டு வருவது. உடலுக்குரியது செயல், உணர்வுக்குரியது உறவு, மனத்திற்குரியது அறிவு. செயல் அறிவால் உறவை உயர்த்துவது பசியும், ஆசையும், பிணக்கும் அன்பாவது. **அன்பு சைத்தியப்புருஷனுக்குரியது. பரிணாமம் சைத்தியப்புருஷனை உருவாக்க வாழ்வு ஓர் அரங்கமாக இருக்கிறது.**

## வாழ்வின் எழுச்சி

– அணு மனிதனை இரு கூறுகளாகப் பிரிக்கிறது.

– சைத்தியப்புருஷன் என்ற மையம் அன்பால் பிணக்கைச் சுமுகமாக்கக் 'கொடுத்து வளர்வது' என்ற கொள்கையை ஏற்கிறது.

## வாழ்வின் பிரச்சினை

– வாழ்வு என்பது சச்சிதானந்தத்தின் விழிப்பான சக்தி.

அதன் மையம் துண்டு செய்யும் மனம்.

மனம் எதிரான இரட்டைகளை மோதவிடுகிறது.

இதற்குத் தீர்வு வாழ்வில் மனம் தேடவேண்டும்.

– ஜீவியத்தின் நான்கு முனைகள் சத்தியஜீவியம், மனம், வாழ்வு, உடல்.

– மூன்று தடைகள்:

1) மனிதன் மேல் மனத்தில் வாழ்கிறான்.

2) மனத்தால் மனிதன் பிரிக்கப்பட்டுவிட்டான்.

3) சக்தியும் ஜீவியமும் பிரிந்துள்ளன.

– சக்தியும், ஜீவியமும் சுமுகமாக இணைய மனித ஜீவியம் பிரபஞ்சம் முழுவதும் பரவ வேண்டும். அது சத்தியஜீவியத்திற்கு உரியது. அதுவே நான்காம் நிலை.

## இரட்டையான ஆத்மா

– மனம், உடல், உயிர், ஆன்மா ஆகியவை இரண்டிரண்டாகப் பிரிந்துள்ளன.

1) மனம் – அடிமனம்
மேல்மனம்

2) வாழ்வு – வாழ்வு
சூட்சும வாழ்வு

3) உடல் – ஜடமான உடல்
சூட்சும உடல்

4) ஆத்மா – வளராத ஜீவாத்மா
வளரும் சைத்தியப்புருஷன்.



– சைத்தியப்புருஷன் ஆசையை வென்று, ஆத்மாவை விடுதலை செய்து, சத்தியஜீவியத்தை அடைந்து, மூன்று திருவுரு–மாற்றங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

## ஜடம்

– ஜடம் என்பது சச்சிதானந்தம்.

- மனம் புலன்வழி ஆத்மாவை ஜடமாகக் காண்கிறது.
- சத் பிரபஞ்சத்தில் ஆன்மீகப் பொருளாகி, மனத்தால் பிரிக்கப்பட்டும் சேர்க்கப்பட்டும் ஜடமாகிறது.
- மனம், வாழ்வுபோல் ஜடமும் பிரம்மமே.
- ஜடம் என்பது சக்தி பெற்ற ரூபம்

  சக்தியைக் கொடுத்தது வாழ்வு.

  ரூபத்தைக் கொடுத்தது மனம்.
- சத் தன்னைத் தன்னுள்ளே கிரகித்து சிக்கலாகி, மறந்த நிலை ஜடம் எனப்படும்.
- ஜடத்துள் ஜீவியம் ஒளிந்துள்ளது.

  ஜீவியத்துள் ஜீவன் ஒளிந்துள்ளது.

  ஜடம் ஜீவியத்தை ஜீவனைக் கண்டுபிடிக்கத் தூண்டு–கிறது.
- சச்சிதானந்தம் தன்னை மனத்தின் புலன்வழிக் காணும் பொழுது தானே அதற்கு ஜடமாகத் தெரிகிறது.

## ஜடத்தின் முடிச்சு

– ஜடம் பரிணாமத்தால் சத்புருஷனாக உள்ள தடைகள் மூன்று.

1) அறியாமை 2) தமஸ் 3) பகுதியாகப் பிரிந்த நிலை.

– பிணக்கின்பின் சுமுகம் உண்டு. அற்புதமான ஐக்கியத்தை

நோக்கி உலகம் செல்கிறது.

- வாழ்வு பிரிவினையை அனுமதிக்கிறது. தன்னுள் பொருள்களைக் கிரகித்து விழுங்குவது வாழ்வின் வழி.
- மனமும், சத்தியஜீவியமும் வாழ்விலிருந்தும், ஜடத்திலிருந்தும் பரிணாமத்தால் எழுகின்றன. பிரிவினை ஒழிய முடியும்.
- நம் மனத்தின் கண்ணோட்டம் தடை. பொருள் பல நிலை-களிலிருப்பதால் நம் மனம் மாறினால் பொருள் திருவுருமாறிச் சத்தாகும்.

## பொருளின் பல கட்டங்கள்

- பொருள் ஏழு கட்டங்களிலிருந்தாலும் எல்லாம் ஒரே வகையின. அதனால் பரிணாமத்தால் ஜடம் உயர்ந்து சத்தாகும். நாம் காய்கறிகளைச் சாப்பிடுகிறோம். அவை ஜீரணமாகி உடலுடன் கலக்கின்றன. நம் உடலும், காய்கறியும் வேறு வேறு வகையான தானாலும் இரண்டும் ஒரே பொருளால் செய்யப்பட்டதால் அவற்றால் உடலுடன் கலக்க முடிகிறது.

## சப்த லோகம்

- வேதம் உலகை 7 அல்லது 8 ஆகப் பிரிக்கிறது. 10 அல்லது 12 ஆகவும் பிரிக்கலாம். பகவான் மரபின் 7 பிரிவை 8 பிரிவாக்குகிறார். அப்படி அவர் புதியதாகச் சேர்த்தது சைத்தியப்புருஷன்.
- சத், சித், ஆனந்தம், சத்தியஜீவியம் மேலேயுள்ளவை. அவை தலைகீழே மாறி ஜடம், வாழ்வு, சைத்தியப்புருஷன், மனமாகின்றன.

## தெய்வீக மனத்தின் மாயை

- அறியாமை என்பது முழுமையிலிருந்து பிரிந்து ஒரே விஷயத்தில் நிலைப்பது.



- மேல்மனத்திலிருந்து உள்மனம் சென்று அங்கிருந்து உயர்ந்து ஆன்மீக மனத்தை (முனி, ரிஷி, யோகி, தெய்வம்) அடைந்தால் சத்தியஜீவியத்தையடையலாம். இது சூட்சுமத் தொடர்பு. விவேகானந்தர் பகவானுக்கு சத்தியஜீவியத்தைக் காட்டினார். எப்படி அதை அடைவதுஎனக் கூறவில்லை. அதைக் கண்டு-பிடிக்க பகவானுக்கு 10 வருஷமாயிற்று. மேலே போக உள்ளே போக வேண்டும் என்பது இரகஸ்யம்.
- மேல்மனத்திலிருந்து உள்மனம் சென்றடைந்தால்

  1) மனோமயப்புருஷன் தெரியும்.

  2) நிர்வாணக் கதவு திறக்கும்.

  3) சைத்தியப்புருஷனை அடிமனத்தில் நாடும் வழி பிறக்கும்.

  சைத்தியப்புருஷனை நாடினால் அங்கிருந்து உயர்ந்து ஆன்மீக மனம் வழி சத்தியஜீவியமடையலாம்.

- தெய்வீக மனம் One ஏகனுக்கு அனந்தமான வாய்ப்புகளை அளிக்கிறது.

## பிரம்ம சிருஷ்டி பிரபஞ்ச சிருஷ்டி

- உலகை சிருஷ்டித்த சித்-சக்தி தன்னை நமக்கு வெளிப்-படுத்துவதில்லை.
- விஞ்ஞானி ஜட உலகில் இரகஸ்யத்தைத் தேடுகிறான்.
- ஜீவியம் ஜட இருளினின்று பரிணாமத்தால் வெளி வருகிறது என்ற கொள்கை சரிஎன நிரூபிக்கப்பட்டது.
- ஏன் விதையிலிருந்து மரம் வருகிறது, ஆக்ஸிஜன், ஹைடிரஜ-னிலிருந்து ஏன் நீர் உற்பத்தியாகிறதுஎன்று இக் கொள்கை விளக்குகிறது.
- ஜீன், குரோமசோம்என்ற ஜடப்பொருள் எப்படி மனித சுபாவத்தைத் தாங்கி வருகின்றனஎன அவை நிரூபிக்கின்றன.
- அகம் புறத்தை நிர்ணயிப்பதுபோல் மனம் ஜடத்தை ஆள்கிறது.

பகவான் சிருஷ்டியைப் பற்றிக் கூறுவது:

- இறைவன் அனந்தமான ஜீவியஜோதி.

  இறைவன் தானே உலகமாக முடிவு செய்து அணுவான ஜடமான இருளானான்.

  இறைவன் உலகமானது சிருஷ்டி.

  உலகம் மீண்டும் இறைவனையடைவது பரிணாமம்.

  ஜடம் வாழ்வாகி மனமெனும் மனிதனாகியது பரிணாம வளர்ச்சி.

  உலகில் ஆயிரம் பொருள்கள் உள்ளன.

  மரம், செடி, மனிதன், கல், நீர், நெருப்பு போன்றவை அவை.

  விஞ்ஞானிகளும், ரிஷிகளும் இவை எப்படி உற்பத்தி ஆயின எனக் கேட்கிறார்கள். (Who determined them to be what they are?)

  ஜடம் மரமாக வேண்டும்என முடிவு செய்தது யார்?

  ஜடம் முதலில்; மரம் அடுத்தது.

  முதலிலுள்ள ஜடம் அடுத்து வரும் மரத்தை நிர்ணயிக்-கிறது.

  முதலிலுள்ளது அகம், அடுத்து வருவது புறம்.

  எனவே அகம் புறத்தை நிர்ணயிக்கிறது.

  இந்த ஜடம் அதன் முன்மனத்திலிருந்து எழுந்தது.

  எனவே மனம் ஜடத்தை ஆள்கிறது.

- அம்மனம் மனித மனமில்லை, தெய்வீக மனம்.
- சத்தியஜீவியம் சிருஷ்டிக்கிறது. அதன் வழியை மனத்தால் அறிய முடிவதில்லை.
- தெய்வீக மனத்தில் ஐக்கியமில்லை. சத்தியஜீவியத்தில் ஐக்கியமுண்டு. அதனால் அது சிருஷ்டிக்கிறது.



- சத்தியஜீவியம்என்பது சச்சிதானந்தம்; முடிவாக அது பிரம்மம்.
- அஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தை அறிவது அவசியம்.
- பிரம்மத்திலில்லாதது உலகில் சிருஷ்டியாக வர முடியாது.

## பிரம்மம், புருஷா, ஈஸ்வரா

- மனம் சத்தியத்தை அறிய முடியாது. அறிவுக்குத் திறனில்லை. ஞானத்திற்கும் ஊடுருவும் பார்வைக்கும் அத்திறனுண்டு.
- மனம் பிரம்மத்தையறியப் பாடுபடுகிறது. பிரம்மம், புருஷா, ஈஸ்வரா ஆகிய மூன்றையும் இணைத்து ஏகனையும், அநேகனையும் ஒரே சமயத்தில் காணும்படி முயன்றால் மௌனமும் சலனமும் ஒன்றாகும். ரூபமும் அரூபமும் ஒன்றாகும், கண்டமும், அகண்டமும் ஒன்றாகும். மனத்தின் தடையைக் கடக்கலாம்.
- மாயையால் எதையும் செய்ய முடியும். தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். தன்னுள் தன்னைக் கிரகித்துக் கொள்ள முடியும்.
- இதனால் பாதாளமும், பரமாத்மாவும் ஏற்படுகின்றன.
- நாம் சத்திலிருந்தால் அனைத்தையும் செய்வது மாயைஎன அறிகிறோம். அங்கிருந்து சாட்சிப்புருஷனையடையாமல் ஆன்மாவின் தீவிரச் செயலின் அனுபவத்தையடைந்தால், மாயை ஜீவனின் சக்தியாகக் காணப்படும்.

  மாயை, பிரகிருதி, சக்தி என்பவை பிரம்மம், புருஷா, ஈஸ்வரனுடைய சக்திகளாகும்.

  | | | |
  |---|---|---|
  | மாயை | - | சிந்தனையால் சிருஷ்டி செய்வது. |
  | பிரகிருதி | - | தீவிரமாகச் செயல்படுவது. |
  | ஈஸ்வரன் | - | இவையிரண்டையும் சேர்த்துச் செய்ய வல்லது. |

சிந்தனையால் சிருஷ்டித்து, தீவிரமாகச் செயல்படுவது.

ஈஸ்வரன், பிரம்மம், புருஷனைத் தன்னுட்கொண்டது.

சக்தி, மாயை, பிரகிருதியைத் தன்னுட்கொண்டது.

பிரம்மம், புருஷா, ஈஸ்வரா, மாயை, பிரகிருதி, சக்தி இவற்றிடையே எந்த முரண்பாடும் இல்லை.

– ஆன்மீகம் யதார்த்தம், தெளிவானது. தத்துவ ஆராய்ச்சி ஏட்டுச் சுரைக்காய். யோகம் செய்தால் தெளிவு ஏற்படும்.

– ஏகன் என்பது அடிப்படை. அகந்தை இதை மறைக்கிறது. ஆத்மா பிரம்மத்திற்குரியது.

– சமர்ப்பணத்தாலும், சரணாகதியாலும் நாம் சத்தியத்தை அடையலாம். ஆத்மாவையும், சுபாவத்தையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்வோம்.

– சத் புருஷனில் சிருஷ்டிக்கும், அதற்கு முன்நிலைக்கும் வித்தி–யாசமில்லை.

– காலம், காலத்தைக் கடந்தது என்பவை ஒன்றே. நித்தியத்தின் இரு நிலைகள் அவை.

– காலத்துள், காலத்தைக் கடந்தது வந்து உடனுறைந்தால் மூன்றாம் நிலைக் காலம் – அற்புதம், அதிசயம், ஆச்சரியம் – ஏற்படுகிறது.

## பரமாத்மாவும், ஜீவாத்மாவும்

– அஞ்ஞானம்என்பது என்னஎன்று தெரிவது முக்கியம்.

– ஜீவன், நமது ஜீவனுடைய ஆத்மாஎன்பது பிரபஞ்ச ஆத்மாவில் உள்ளது. அது பிரம்மத்தில் உறைகிறது. அமர வாழ்வு அவனுக்கே.

– மூன்று தவறுகள்:

1) சிருஷ்டிக்கும் பிரம்மத்திற்கும் இடையே வெளி உள்ளதாக நினைக்கிறோம்.



2) முரண்பாட்டை முடிவானதாகக் கருதுகிறோம்.

3) சிருஷ்டி காலத்தால் ஏற்பட்டதுஎனக் கருதுகிறோம்.

– பிரம்மம் சொல்லைக் கடந்தது.

– வேண்டியது உயிர்வாழ வேண்டாதது வேண்டும். வேண்டாதது வாழ வேண்டியது வேண்டும். அவற்றிடையே முரண்பாடில்லை.

– தனித்தன்மை, பொதுத்தன்மை, சாரம்.

– முத்தும், வைரமும் வேறு என்பது முதல் நிலை சத்தியம். இவையிரண்டும் பொதுஎன்பது விஞ்ஞானம் கூறுவது.

தனித்தன்மை தெரிந்தால் பயன்படுத்தலாம்.

பொதுத்தன்மை தெரிந்தால் அவற்றைச் செய்யலாம்.

சாரம் (பிரம்மம்) தெரிந்தால் ஒன்றை மற்றதாக மாற்றலாம். அது ரஸவாதம் எனப்படும்.

– பிரம்மத்திற்கும் சிருஷ்டிக்கும் வேறுபாடுண்டுஎனக் கருதுவது விஞ்ஞானத்தின் குறை. வேறுபாடில்லை.

## இறைவனும், அசுரனும்

– நாம் அறியாமையால் வாழ்கிறோம். அறிவால் வாழலாம். அறிவால் வாழ்வது இறைவன். அறியாமையில் வாழ்வது அசுரன்.

– குறை பிரிவினையிலிருந்து எழுகிறது. அது லிமிட்டாகவும், குதர்க்கமாகவும் தெரிகிறது.

– உலகை இறைவனின் அற்புதமாக அறியும்வரை எந்த விளக்கமும் பயன்தாராது, நம்மை இறைவனாக நாம் அறிய வேண்டும்.

– லிமிட்என்பது நமக்கு, ஜீவனுக்கில்லை.

– இறைவனது சிருஷ்டியில் அஞ்ஞானமே பெரிய சக்தி.

– வலி ஆனந்தத்தை முழுமையாக அனுபவிக்க உதவும்.

- முழுமையை மனம் அனுபவிப்பதைத் தடை செய்கிறது. அதனால் எதிரானதையும் அனுபவிக்க முடியும்.
- தீமையை விலக்கினால் நன்மையையும் விலக்க வேண்டி வரும். (நாட்டில் லஞ்சத்தை முழுமையாக விலக்க முடியுமென்றால் எல்லா development activitiesஉம் உடனே நின்றுவிடும்.)
- லீலைக்கு ஜீவாத்மாவின் அனுமதியும், பரமாத்மாவின் அனுமதியும் தேவை. (எந்தக் காரியத்திற்கும், சிறியது பெரியதானாலும், இந்த இரண்டு அனுமதியில்லாமல் நடக்காது.)
- பிரம்மத்திற்கு எதையும் சுயமாக வெளிப்படுத்தும் உரிமை உண்டு.

  சிரமம் அதிகமானால், ஆனந்த அனுபவமும் அதிகமாகும்.

## பிரபஞ்ச மாயை

- ஜடமனம் எதையும் நம்ப மறுக்கும்.

  உயிரின் மனம் மாயையை நம்பும்.

  சிந்தனைக்குரிய மனம் பிரம்மத்தை நாடும்.

  - ஜடம்என்பது உடல்; தொட்டால் அறியும்; தொடா-விட்டால் அறியாது. கண்ணை மூடிக்கொண்டால் எதிரிலுள்ள ஸ்டூல் தெரியாது. தெரியாது என்பதால் இல்லை என்கிறோம். கையால் தொட்டுப் பார்த்தால் ஸ்டூல் இருக்கிறது என்கிறோம். ஜடமான உடலுக்குத் தான் தொட்டுப் பார்க்க முடியாத எதுவும் இல்லை என நம்பும். எதையும் நம்பமுடியாத தத்துவத்திற்கு agnosticism எனப் பெயர்.
  - உயிர் உற்சாகமுள்ளது. எதையும் கற்பனை செய்யும் திறனுள்ளது. கற்பனையில் தெரிந்தால் அதற்கு உயிர் வரும்; அதை நம்பும். அது உண்டா, இல்லையாஎன்பது கேள்வியில்லை. கற்பனை மகிழ்ந்தால் கருத்து ஏற்கும். உள்ளதையே இம்மனம் கற்பனையால் மட்டும் ஏற்க வல்லது. அதனால் இதற்கு மாயை இதமாக ஏற்புடையது.
  - சிந்தனையின் இலட்சியம் இருப்பதன் அடிப்படையைக் காண்பது. ஆராய்ச்சியை நடுவில் நிறுத்தாவிட்டால் சிந்தனை பிரம்மத்தில் முடியும்.

- பகவான் மாயைஎன்ற தத்துவத்தை மறுத்து அனைத்தும் சத்தியம்என்ற கொள்கையை நமக்களிக்கிறார்.
- கனவு பொய்யன்று, ஆவி ரூபங்களும் பொய்யல்ல.

  கனவு அடிமனத்திற்கு உண்மை.

  ஆவிரூபங்கள் உள்ளதின் பிரதிநிதிகள்.
- ஆதியான ஜீவியம் மாயையை உற்பத்தி செய்யும். அஞ்—ஞானத்தின் கருவியாக மனத்தை உற்பத்தி செய்யும். மனம் மாயையைக் கைவிட்டு, பிரம்மத்துடன் இணைய வல்லது. இக்கொள்கையை பகவான் ஏற்கிறார்.

## சத்தியமும், பிரபஞ்ச மாயையும்

- மனிதன் மறுக்கலாம். பார்ப்பதை மறுக்கலாம். பார்வையை மறுக்கலாம். பார்ப்பவனையும் மறுக்கலாம்.
- உலகில் தூய்மையான அக்ஷரமான சத்தியம் உண்டு. மாயையான உலகமும் உண்டு.
- பிரம்மத்தின் நிலைகள்:
  1) ஜீவன் (Self) என்பது பிரம்மம்.
  2) உலகிலுள்ள அனைத்தும் பிரம்மம்.
  3) உலகில் உள்ள அனைத்தும் ஜீவன்; ஜீவனால் பார்க்கப்படும் ஜீவன் – அதை 4 நிலைகளில் காண்கிறது.

– உபநிஷதம் கூறும் மூன்று நிலைகள்

1) அகம், புறமற்ற பரமாத்மா.

2) ஒளிமயமான சமாதியில் பரமாத்மா திரளான ஜீவியமா–கிறது.

3) அகமும் புறமுமான ஜீவன்.

– புத்தர் போட்ட முட்டுக்கட்டையை உடைக்க சங்கரர் வாதம் பயன்பட்டது. ஆனால் அதனால் முடிவான தீர்வைத் தர இயலாது.

– அறிவு கட்டிய அத்தனைக் கோபுரங்களும் தீர்க்கமான ஆன்மீக அனுபவத்தால் மாயமாய் மறையும்.

– தெய்வீக மனத்திற்கும் சத்தியஜீவியத்திற்குமிடையே ஒரு சுமுகம் உண்டு.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தனிமனிதனுடைய சுயநலம், இலாபம், அகந்தைக்கு ஆதரவு இல்லாத எதுவும் பூர்த்தி அடையாது. இறைவனுடைய பணிக்கு இவையெல்லாம் விலக்கு. அகந்தைக்குரிய வேலை எதுவும் இறைவனுக்குச் சேவை செய்யாது. அகந்தையை அழித்தே அதைச் செய்ய முடியும். அழிக்க உரிமையுள்ள அகந்தை நம் சொந்த அகந்தை மட்டுமேயாகும்.

***அகந்தையை அழிப்பதே சேவை.***

***அழிக்கவேண்டியது சொந்த அகந்தையே.***





**P.72, 73 Late will he know, opening the mystic script.**

**புதிரான அக்ஷரத்தைக் கண்டு, மெதுவாக அறிவான்.**

- ✡ **புலப்படாத துறையில், இல்லாத துறைமுகம்.**
- ✡ **அவள்ளனும் அஸ்திரம் தாங்கி அவனெழுந்து போகிறான்.**
- ✡ **இறைவனின் பெருநகரில் புதுமெருகு பெற்ற உடலின் புதுமனம்.**
- ✡ **பெரியதன் மாளிகையில் அழிவற்றதின் அரியாசனம்.**
- ✡ **அணுவும் அகண்டமும் இணைந்ததின் இயல்பு.**
- ✡ **முடிவற்ற காலமெனும் பெருவெளியில் உப்பான விரயம்.**
- ✡ **வழிதவறிய அவன் கலத்தைக் கடத்தும் கடலெனும் அவள் காற்று.**
- ✡ **பிரபஞ்சத்தின் பிரவாகம் வழிநடத்தும் அவன் பாதை.**
- ✡ **அவனைச் சூழ்ந்த வதந்தி, ஆபத்தின் அழைப்பு.**
- ✡ **பாதை அவளுடையது, பயணம் அவனுடையது.**
- ✡ **வாழ்வும், மரணமும், மற்றவர் வாழ்வும் அவன் கடந்து செல்வது.**
- ✡ **விழிப்பில் ஆரம்பித்த பயணம் தூக்கத்திலும் தொடரும்.**
- ✡ **சூட்சுமத்தைக் கடந்த அவள் சக்தி அவனை உந்தும்.**
- ✡ **புதிரான பயணம் முடிவான முகம் கண்டதில்லை.**
- ✡ **அவள் சிருஷ்டியின் கதி கட்டுப்பட்ட விதி.**
- ✡ **பயணம் பெரியது, ஆரம்பிக்கலாம், முடிக்க முடியாது.**
- ✡ **ஆத்மாவுக்கு இருள் மறையும்வரை இருப்பது அவசியம்.**
- ✡ **இறைவனின் காலை இருளின் மாலையை ஏற்றது.**
- ✡ **இயற்கையுள்ளவரை இருப்பவன் இவன்.**
- ✡ **அவனும் அவளும் ஒன்றென்பது உறுதி.**
- ✡ **தூக்கத்தில் அவளை அவன் மார்பில் தாங்குகிறான்.**
- ✡ **எவர் போனாலும், அவன் போவதில்லை.**

- ✡ அறியமுடியாத அனந்தத்தில் அவளுடைய அரவணைப்பு.
- ✡ செய்ய வேலையுண்டு, அறியும் சத்தியம் உண்டு.
- ✡ ஆட்டம் உண்டு, புதிரும் நிறையும்,
- ✡ காளியின் களியாட்டத்தில் கணக்கும் உண்டு.
- ✡ நினைத்ததுபோல் அவள் ஆடும் பெரிய ஆட்டத்தில் இலக்குண்டு.
- ✡ வாழ்வு பிறந்ததிலிருந்து இதுவே அவள் அறைகூவல்.
- ✡ இறைவனின் சித்தம் அவள் ஆட்டத்தால் சூழப்பட்டது.
- ✡ பெயரறியாத சூன்யத்திலிருந்து பெயர்ந்து எழுந்த பேர்.
- ✡ புவியின் தவம் வேரூன்றிய இடத்தில் தட்டி எழுப்பும் சத்தியஜோதி.
- ✡ ஊமை உலகத்தின் உள்வெளியில் எழும் பேசாமடந்தை.
- ✡ மலைப்பாம்பின் நித்திரையில் எழுந்த அழிந்த சக்தி.
- ✡ காலத்தைக்கடந்த கண்கள் காணும் காலம்எனும் திடல்.
- ✡ திரை விலகி வெளிவந்த உலகின் இறைவன்.
- ✡ தூய்மையான அனந்தம் துவக்கும் காட்சி.
- ✡ ஆத்மா தாங்கும் அவனியின் பாரம்.
- ✡ மனமழிந்த லோகத்தில் விதையென முளைத்த இறைவனின் தலைப்பு.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பரம்பொருள் நம்மைத் தீண்டாமல் நமக்குப் பரம்பொருள் சித்திக்காது. அவனால் முடியாததைச் சாதிக்க, சமூகம் உதவாமல் மனிதனால் சாதிக்க முடியாது. தனிமனிதனுடைய ஆர்வமே வளர்ந்து சமூகத்தின்மூலம் அவனிடம் மீண்டும் வருகிறது. மனிதனே ஆரம்பம்.

*பரம்பொருளால் சித்திக்கும் பரம்பொருள்.*



## சுனாமி - பறவைகளின் நுண்ணறிவு

V. இராமதாசு

இயற்கைச் சீற்றங்களிலிருந்து மனிதர்களும் விலங்குகளும் எப்படிப் பாதுகாக்கப்படுகின்றனர்என்பதை விளக்க எழுதப்பட்டுள்ள கட்டுரை இது. கண்மூடியாக உள்ள மனிதர்கள் கண்ணைத் திறக்க ஆண்டவன் பஞ்சம், நோய், தீவிபத்து, பூகம்பம், புயல்வெள்ளம் ஆகியவற்றை எழுப்புகிறான்என்று அன்னை கூறுகிறார். மனிதன் கண்மூடியாக இல்லாமல் விழிப்பாக இருந்து இந்தப் பேரிடர்களை எதிர்கொண்டால் அவன் ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கப்படுகிறான். விழிப்பாக இருப்பதுஎன்றால் உலகெங்கும், பிரபஞ்சமெங்கும் பரவியுள்ள சூட்சும ஸ்தாபனமான சித்-சக்தி அன்னையை அழைத்துச் செயல்பட அனுமதிக்கவேண்டும். இதுபோன்ற பேரிடர்களி-லிருந்து விலங்குகள் இயல்பாகத் தம் செயலினுள் மறைந்துள்ள ஞானத்தின்மூலம் பாதுகாத்துக்கொள்கின்றன. அவைகளில் அந்த ஞானம் programme செய்யப்பட்டுள்ளது. அதை மாற்றும் விருப்பம் அதற்கு கொடுக்கப்படவில்லை. விலங்குகளுக்குப் பாதுகாப்பு இயல்பாகக் கிடைக்கும்போது மனிதன் ஏன் அன்னையின் பாதுகாப்பை நாடவேண்டும்? கண்மூடியாக இருந்து பாதுகாப்பைவிட்டு விலகியும் இருக்கலாம். விழிப்பாக இருந்து பாதுகாப்புக் கவசத்தை அணிந்துகொள்ளலாம். தனக்கு எது வேண்டும்என்ற முடிவை - விருப்பத்தை - அவன்தான் தீர்மானிக்க வேண்டும். விழிப்பாக இருந்து சித்-சக்தி, அன்னை-சக்தி என்னஎன்றும், விலங்குகளின் செயலினுள் ஞானத்தை மறைத்துவைத்துச் செயல்படும் சக்தி எதுஎன்றும் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு பகவான் ஸ்ரீ அரவிந்தர் லைப் டிவைன் புத்தகம் சத்புருஷன், சித்சக்தி போன்ற அத்தியாயங்களைப் படிக்கவேண்டும். படித்துப் புரிந்துகொண்டால் கருத்துகள் நன்கு விளங்கும்.

## சித்-சக்தி என்றால் என்ன?

சத்-சித்-ஆனந்தம் என்ற சச்சிதானந்தத்தில் சத்என்பது சித்ஆகவும் சக்தியாவும் சித்சக்திஎனப் பிரியுமிடத்தில் அன்னை அவதரிக்கிறார். உலகமே அந்த சக்தியால் உற்பத்தியாவதால், அன்னை சக்திக்கு அனைத்து சக்திகளின் திறனுண்டு. ஏன் அன்னைக்கு அந்த சக்தியிருக்கிறதுஎனத் தெரியவேண்டும் - அதை நம்பவேண்டும்; நம்பினால் அதற்கு சக்தியுண்டு. பகவான் ஸ்ரீ அரவிந்தர் (*Life Divine* - First Book, Chapter 9,10) லைப் டிவைன், முதல் புத்தகம், அத்தியாயம் 9 மற்றும் 10இல் முறையே சத்புருஷன், சித்-சக்தியை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அதன் கருத்துகள் இம்மி அளவு மாறாமல் தமிழில் 'மலர்ந்த ஜீவியம்' மாத இதழ்களில் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் அன்பர்களுக்கு வழங்கியுள்ளார்கள். அதிலுள்ள நமக்குத் தேவையான பகுதிகளைமட்டும் கருதுவோம்:

**சத்புருஷன்:** "எறும்பு சூரிய மண்டலத்தின்முன்பு துரும்பு; மண்டலம் பெரியது, எறும்பு சிறியது. ஆனால் அவற்றின் பின்னாலுள்ள பிரம்மம் இரண்டிலும் சமமாக உள்ளது. உயிருள்ளதுஎன்பதால் எறும்பு சூரிய மண்டலத்தைவிட உயர்ந்தது. அதே கணக்குப்படி மனிதன் உலகிலுள்ள அனைத்தையும்விட உயர்ந்தவன்" (பரம்பொருள் II, ப. 281).

**சித்-சக்தி:** இந்த அத்தியாயத்தில் விலங்குகளைப்பற்றி எழுதியதை இப்பொழுது நாம் கருதுவோம். "விலங்கின் வாழ்வை கவனிப்போம். அதன் இலட்சியம் அங்குத் தெளிவாகத் தெரிகிறது. விலங்கின் அறிவு நுணுக்கமானது. விஞ்ஞானரீதியில் தவறவே முடியாது. நாம் விலங்கில் காணும் அறிவு விலங்குக்கு அப்பாற்பட்டது. மனிதன் விலங்கின் இத்திறமையைக் கற்க முயன்றால் நெடுநாள் கற்று, நீண்டநாள் பயில வேண்டும். கற்று முடிந்தபின்னும் விலங்குபோல் துல்லியமாக அவனால் செயல்பட முடியுமாஎன்பது சந்தேகம்; அது அவனால் முடியாது. இது பொது உண்மை. இவ்வுண்மை ஜீவனுள்ள சக்திஎன விலங்கின் திறனை நிரூபிக்கிறது. இத்திறன் விலங்கிலும் புழுபூச்சியிலும் காணப்படுகிறது. உலகில் அதிகபட்ச புத்திசாலித்தனம் மனிதனில் வெளிப்படுவதை நாம் அறிவோம். விலங்கின் திறன் அதைவிட உயர்ந்தது. விலங்கின்



குறிக்கோளும் எண்ணமும் அவற்றைவிடத் தெளிவானது. அதன் உபாயங்களும் கருவிகளும் நிபந்தனைகளும் நாமறிந்த மனித அறிவைவிட உயர்ந்தவை. உயிரற்ற ஜடமான இயற்கை சக்தியில் நாம் இந்த அறிவின் சிறப்பைக் காண்கிறோம். மறைந்துள்ள உச்சகட்ட ஞானத்திற்கு ஓர் அடையாளம் உண்டு. தம் செயலினுள் மறைந்துள்ள ஞானம்என அதைக் கூறுகின்றனர். அதை விலங்கில் காண்கிறோம் (பரம்பொருள் II, ப. 369).

மேற்கண்ட அத்தியாயங்களில் நாம் குறிப்பாக அறிந்துகொள்ள வேண்டியவை என்னவென்றால் எறும்புக்குப் பின்னால் பிரம்மம் உள்ளது. அந்த பிரம்மத்தின் ஞானம் விலங்குகளில் விஞ்ஞானரீதியில் தவறாத நுணுக்கமான அறிவு, அதன் செயலினுள் மறைந்துள்ள ஞானமாக உள்ளது.

**விலங்குகளின் திறன் மனிதனில் வெளிப்படும் புத்திசாலிதனத்தைவிட உயர்ந்தது.**

**விலங்குகளின் முக்கியக் குறிக்கோள்:** தங்களுக்கு வேண்டிய உணவை தேடிப் பெறுதல், இனப்பெருக்கத்திற்காக, பாதுகாப்பான இடம் சென்று முட்டையிட்டு, குஞ்சு பொரிப்பது அல்லது குட்டி போடுவது, குஞ்சுகளுக்கு உணவளித்து பாதுகாப்பாகச் செயல்படுவது. மேற்கண்ட இலட்சியத்தை, குறிக்கோளை அடைய எறும்பு எப்படிச் செயல்படுகிறதுஎன்று பார்ப்போம். எறும்புகள் அவைகளுக்கு வேண்டிய உணவு இருக்குமிடத்தை தன்னுள் மறைந்துள்ள ஞானத்தின்மூலம் அறிந்து கூட்டம் கூட்டமாகச் சென்று உணவைப் பெறுகிறது. மனிதனுக்கு எல்லா இடங்களிலும் human choice உள்ளது. "எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும்" என்று ஒரு பழமொழியைக் கேள்விப்பட்டிருக்கிறோம். சில சமயங்களில் எறும்பு சாரை சாரையாக அதன் முட்டைகளை தூக்கிக்கொண்டு உயரமான இடத்திற்குச் சென்று முட்டைகளைப் பாதுகாக்கும். ஏன் அப்படிச் செய்கிறது என்று பார்த்தால் சிறிது நேரத்தில் மழைபெய்யும். மழைபெய்தால் முட்டைகள் அழிந்துவிடும். மழைபெய்யப்போகிறதுஎன்று முன்கூட்டியே எறும்பு தன்னுள் மறைந்துள்ள ஞானத்தின்மூலம் அறிந்து செயல்படுகிறது. மழை வருவதை அறிவதோடுமட்டுமல்லாமல் பாதுகாப்பைப்பெற செயல்படவும் செய்கிறது. நம்மைப்போல் அறிந்தும் சோம்பேறியாய் செயல்படாமல் இருப்பதில்லை.

இந்த அறிவு நுணுக்கமானது; விஞ்ஞானரீதியில் தவறவே முடியாது. ஆனால் மனிதன் வானிலையை விஞ்ஞானக்கருவிகளைப் பயன்படுத்தி அறிய முற்படுகிறான். சில சமயம் அவன் கணிப்பு சரியாக இருக்கும். பல சமயம் மழை முன்னறிவிப்பு தவறாகவே வெளியிடப்படும். வானிலை இலாகா தவறினாலும் எறும்பின் முன்னறிவிப்புத் திறன் அதனுடன் கூடிய செயல் தவறுவதில்லை.

26, டிசம்பர் 2004 அன்று சுனாமி பேரலைகளால் இந்தோனேஷியா, தாய்லாந்து, அந்தமான் நிக்கோபார் தீவுகள், இலங்கை, தென்னிந்தியாவின் கடற்கரையோரப் பகுதியில் சுமார் 1,50,000 மக்கள் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகள், பொருட்களை இழந்தனர்என்ற செய்தி மனிதஇனத்தை, கதிகலங்க வைத்துள்ளது. இதை முன்பே அறிந்து அபாய அறிவிப்பு செய்யவேண்டிய வானிலை இலாகா சரியான நேரத்தில் அறிவிப்புக் கொடுக்கவில்லை. இந்தப் பேரழிவுகளைக் கண்டபிறகு மறுபடியும் இதுபோன்ற தாக்குதல் நேரும்போது அரசாங்கம் மக்களைப் பாதுகாக்க வானிலை இலாக்காவிற்கு, சுனாமிபோன்ற இயற்கை சீற்றங்-களைக் கண்டறிய தேவையான கருவிகளை நிர்மாணிக்க உத்தேசித்து உள்ளது. விழிப்பாகச் செயல்பட மனிதன் கண்டுபிடித்த உபாயம் இது.

இந்த சுனாமி பேரிடரின்போது விலங்குகள் சரணாலயம் ஒன்றில் நடந்த அதிசயத்தை விவரிக்க பத்திரிகையில் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார்கள். இந்த சரணாலயம் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ளது. கடற்கரையில் உள்ள வீடுகள், மீனவர்க் குடிசைகள், மனிதர்கள் பேரலைகளால் தாக்கப்பட்டு அழிந்தன. விலங்கு சரணாலயத்தில் இருந்த விலங்குகள், பறவைகள் ஏதும் சுனாமியால் தாக்கப்படவில்லை. ஏனென்றால் அங்குள்ள விலங்குகள் தம் நுண்ணறிவால் சுனாமி வருவதை முன்கூட்டியே அறிந்து அருகிலுள்ள மலைப்பகுதிக்கு தப்பித்துப் போய்விட்டன. இதிலிருந்து நாம் அறிவது விலங்குகளில் மறைந்துள்ள ஞானம் அவைகளுக்கு எச்சரிக்கை செய்து உயரமான, பாதுகாப்பான இடத்திற்கு ஓடச் செய்துவிட்டது. இதைச் செய்தது விலங்குகளில் மறைந்துள்ள பிரம்மத்தின் ஞானம்என்று கூறலாம்.



**பறவைகள் இடம்பெயர்ந்து செல்லுதல்:** பறவைகள் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குத் தங்களுக்குத் தேவையான உணவுக்காகவும், முட்டையிட்டு குஞ்சு பொரிக்க பாதுகாப்பான இடத்திற்குச் செல்லவும் இடம் பெயர்ந்து செல்வதைப்பற்றி படித்திருக்கிறோம். இது பல லட்சம் ஆண்டுகளாக நடைபெறுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அது எப்படிச் செல்கிறதுஎன்பது மனிதனுக்குப் புரியாத புதிராக உள்ளது. தமிழ்நாட்டில் கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக மழை போதுமான அளவு பெய்யவில்லை. அதனால் ஏரி, குளங்கள் காய்ந்துபோயின. செங்கல்பட்டில் உள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு ஆண்டுதோறும் வரும் வெளிநாட்டுப் பறவைகள் எவையும் இரண்டு வருடங்களாக வரவில்லை. ஏனென்றால் வேடந்தாங்கல் ஏரி காய்ந்து போனதுதான் காரணம். சென்ற ஆண்டு பெய்த மழையால் வேடந்தாங்கல் ஏரி நீரால் நிரம்பியது. ஏரியில் உள்ள மரங்கள் நன்கு செழித்து கிளைகளுடன் பசுமையாக காட்சியளிக்கின்றன. ஏரியில் நிறைய மீன்களும், புழுப்பூச்சிகளும் இருக்கின்றன. பறவைகள் வந்து தங்கி, கூடு கட்டுவதற்கு ஏற்ற மரக்கிளைகள், உண்பதற்குத் தேவையான பழங்கள், புழுப்பூச்சிகள் உள்ள இடம் வேடந்தாங்கல்என்று பறவைகள் அறிந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து அங்கு வந்துசேருகின்றன. இதைத்தான் பறவைகளின் நுண்ணறிவுஎன்கிறோம். ஜனவரி 2005இல் சுமார் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பலவகைப் பறவைகள் பாகிஸ்தான், சைனா, சைபீரியா, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பியா நாடுகளில் இருந்து வந்து சேர்ந்திருக்கின்றன. Bird migration பற்றி இன்டர்நெட்டில் பார்த்தால் நம்மை பிரமிக்கவைக்கும் செய்திகள் அநேகம் உள்ளன. அவற்றுள் சில, 1. பறவைகள் ஆண்டுக்கு 24 ஆயிரம் மைல்வரை பறக்கும்; 2. சிலவகை பறவைகளை விமானிகள் 8850 மீட்டர் உயரத்தில் பார்த்திருக்கிறார்கள்; 3. ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைய பறவைகளின் தலையில் 'மேக்னடைட்' என்ற ஒரு சிறிய இரும்புத்தாது உள்ளது. அது பூமியின் காந்தப்புலனுடன் தொடர்புகொண்டு இரவில் நட்சத்திரம், பகலில் சூரியன், இவைகளின் வழிகாட்டுதல்மூலம் செல்கின்றன; 4. தேவையான உணவு, இனப்பெருக்கம் செய்ய பாதுகாப்பான இடத்தை தம்முடைய நுண்ணறிவால் அறிந்து, பிறகு பயணத்தை தொடரும். அதில் தவறே ஏற்படாது; 5. பெரும்பாலும்

தரைவழி மார்க்கத்திலேயே பறந்து செல்லும். எனவே விலங்குகளின் செயலினுள்ளே மறைந்துள்ள ஞானம் அதனுள் உள்ள பிரம்மத்தால் அவைகளுக்கு அளிக்கப்பட்டது. **செயல் பிரம்மமாவதால் ஞானம் முழுமையாகிறது**. மேற்கண்ட உதாரணங்கள் விலங்குகளின் திறன் மனிதனில் வெளிப்படும் புத்திசாலித்தனத்தைவிட உயர்ந்ததுஎன அறிய உதவுகிறது. எனவே இயற்கைச் சீற்றங்களில் இருந்து விலங்குகள் தங்களை முற்றிலுமாகப் பாதுகாத்துக்கொள்ள தவறுவதில்லைஎன அறிய முடிகின்றது.

**பாதுகாப்பு:** இயற்கை சீற்றங்களான அசுரச் சூறாவளி, சுனாமி, இவைகளில் இருந்து விலங்குகளுக்கு இயற்கையாகவே பாதுகாப்பு அதனுள் மறைந்துள்ள ஞானம் கொடுக்கிறது. அவைகள் கேட்டுப் பெறுவதில்லை. ஆனால் மனிதன் பாதுகாப்பு வேண்டிப் பெறவேண்டும். அதை human choice என்று கூறுகிறார்கள். இதுபோன்ற சமயங்களில் அன்பர்களுக்கு அன்னையின் பாதுகாப்பு எவ்வாறு கிடைக்கிறதுஎன்பதை கீழ்க்கண்ட வாழ்வின் உண்மை நிகழ்ச்சிகள்மூலம் அறியலாம்.

**அசுரச் சூறாவளி:** இந்தியப் பேராசிரியர் ஒருவர் அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களுக்குச் சொற்பொழிவாற்ற பல வருடங்களாகச் சென்று வருவார். அதுபோன்று ஒரு முறை சென்றபோது அமெரிக்க நண்பரான கம்ப்யூட்டர் விஞ்ஞானி ஒருவரைச் சந்திக்க அவர் இருந்த ஊருக்குப் போனார். அவருடன் இரு நாட்கள் தங்கினார். மறுநாள் திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு 100 மைல்களுக்கு அப்பால் உள்ள கல்லூரியில் சொற்பொழிவு. ஞாயிறு மாலை புறப்பட்ட அவரை விஞ்ஞானி நண்பர் மறுநாள் காலையில் போகலாம்எனக் கேட்டுக்கொண்டதை மறுத்து, பேராசிரியர் புறப்பட்டுச் சென்றார். திங்கள்கிழமை காலை 8.00 மணிக்குச் செய்தியில் முதல் நாள் அவர் தங்கி இருந்த பகுதியில் சூறாவளியால் சேதம்என்று அறிவித்தார்கள். பேராசிரியர் நண்பரைப் போனில் கூப்பிட்டு விசாரிக்க நினைத்த அதே நேரத்தில் நண்பரிடம் இருந்து போன் வந்தது. விஞ்ஞானி நண்பர் போனில் பேசினார். தமக்கும் தம் குடும்பத்தாருக்கும் ஆபத்து இல்லைஎன்றார். பேராசிரியருக்கு நிம்மதி ஏற்பட்டது. தாம்



முன்னிரு தினங்களும் நண்பர் வீட்டில் தங்கியிருந்தபொழுது அன்னை படத்தின்முன் அமர்ந்து தியானம் செய்தது நினைவுக்கு வந்தது. அன்னைக்கு நன்றி தெரிவித்துவிட்டு சொற்பொழிவு ஆற்றப்போனார். அது முடிந்தவுடன் நேரே நண்பர் தங்கிய இடத்திற்குச் சென்றார். 90 வீடுகள்மட்டுமே கொண்ட செல்வர் காலனி வீடுகள் தரைமட்டமாக இருந்தன. மரங்களைக் காணவில்லை; எங்கும் காற்றின் அமர்க்களம்; உயிர்ச்சேதம் அதிகம். நண்பருடைய மாடிவீடுமட்டும் நிலைகுலையாமல், ஆடாமல், அசையாமல் இருப்பதைக் கண்ட பேராசிரியர் ஸ்தம்பித்துப் போனார். அவர்கள் வீடும் காரும் அருகில் உள்ள 150 அடி மரமும் சேதம் அடையவில்லை. மரத்தின் ஒரு கிளை உடைந்து காரின் கண்ணாடிக்குச் சிறியசேதம். பேராசிரியரை விஞ்ஞானி நண்பர் மீண்டும் மீண்டும் கேட்டார், ‘‘எப்படி நான் காப்பாற்றப்பட்டேன்?’’ பேராசிரியர் அன்னையின் அற்புதங்களை 20 ஆண்டுகளாகப் பலவகைகளில் பார்த்திருக்கிறார். ‘இப்பொழுது நடந்தது நம்பமுடியாத ஒன்று. நண்பரின் வீடும், அதன் உறுப்பினர்களும் முழுமையாகக் காப்பாற்றப்பட்டார்கள்எனில் அன்னையின் அருள் அவருடைய வீட்டை இரும்புக்கவசமாகச் சூழ்ந்திருக்கவேண்டும்’ என்றெல்லாம் நினைத்த பேராசிரியர், “அன்னையின் படம் 2 நாள் உங்கள் வீட்டில் இருந்தது; அதனுடைய பலன்தான் இது” என்றார்.

**இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது:**

- ✡ **அன்னையின் படம், பேராசிரியர் தியானம் இவை அன்னைச் சூழலை அங்குக் கொண்டுவந்தது. அன்னைச் சூழல் அன்னையின் அருள்.**
- ✡ **பேராசிரியர் 20 ஆண்டுகளாக அன்னையின் அன்பர். அவருக்குச் சூறாவளியின் அசுரத்தனம் தெரியாமல் இருக்க அந்த இடத்தைவிட்டு சூறாவளி வரும்முன் அகற்றப்படுகிறார்.**
- ✡ **அன்னை அன்பர்களை அன்னை காப்பாற்றுவதில் எப்பொழுதும் ஓர் உயர்தனிச்சிறப்பு இருக்கும்.**

**சுனாமி:** சுனாமி பேரிடர் வந்தபோது கடற்கரையில் அமர்ந்திருந்தார் ஒருவர். அவர் எதிர்பாராதவகையில் பேரலைகளால் தாக்கப்பட்டார். தன்னால் எதுவும் செய்யமுடியாத நேரம் – உண்மையில் எல்லா

நம்பிக்கைகளையும் இழந்த நேரம் அன்னையை அழைத்தார். க்ஷண நேரத்தில் ஒரு பேரலை வந்து கடற்கரையில் அவரைச் சேர்த்தது. பிறகு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு நலமுடன் இருக்கிறார். அவர் அன்னைச் சூழலில் இருப்பவர்; அன்னையை மறந்துவிட்டார். "நீங்கள்எல்லாம் என்னை மறந்துவிட்டபோதிலும் உங்கள் வாழ்வினுள் நானிருப்பேன்" என்று அன்னை கூறியிருக்கிறார். அன்பர் அன்னையை மறந்திருந்தாலும் கூப்பிட்ட குரலுக்கு அபயம் அளித்துக் காப்பாற்றிய அன்னைக்கு நன்றிகூற மறக்கவில்லை. எல்லாம் இனி அன்னைதான் அவருக்கு.

**வேளாங்கண்ணி டூர்:** டிசம்பர் 26ஆம் தேதி விடுமுறையில் தம் நான்கு நண்பர்களுடன் வேளாங்கண்ணிக்கு டூர் சென்றார். அவரும் நான்கு நண்பர்களும் வேளாங்கண்ணிக் கடற்கரையில் சுனாமி பேரலைகளால் பிரிந்தனர். ஒருவர்மட்டும் பேரலையால் ஒரு மேட்டிற்குத் தூக்கி எறியப்பட்டார். கண் விழித்துப் பார்க்கையில் நண்பர்களைக் காணவில்லை. அவர்மட்டும் காப்பாற்றப்பட்டதற்கு ஏதோ ஒரு விசேஷம் இருக்கவேண்டும் அல்லவா? அவர் அன்னை அன்பர் தோட்டத்தில் வேலை செய்பவர். அன்பருக்காக அன்னைக்கு வேண்டிய மலர்களை அவர் தோட்டத்திலிருந்து பறித்துக் கொடுப்பவர். அவர் அறியாமல் செய்தது அன்னைக்கு மலர்ச் சேவை. அன்பர் தோட்டத்தில் வேலை செய்வது, அன்னையின் சூழலில் தங்கியிருப்பது, அவர் அன்னையை அறியாவிட்டாலும் அன்னையின் சூழல் அருளாக வந்து காப்பாற்றியது.

இந்த சுனாமி பேரலைகளால் லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். கண்மூடியாக இல்லாமல் விழிப்பாய் இருந்திருந்தால் இவர்களும் நிச்சயமாகப் பாதுகாக்கப்பட்டு இருப்பார்கள்.

**அன்னையின் பாதுகாப்பு:** ‘‘எல்லாம்வல்ல அன்னையின் சக்தி உலகெங்கும், பிரபஞ்சமெங்கும் பரவியுள்ள ஆன்மீக சூட்சும ஸ்தாபனம். அந்த ஸ்தாபனத்தின் கிளை நம்முள் உள்ள ஆன்மாஎன்ற உருவில் இருப்பதால் நாம் எந்த நேரமும் நம் உள்ளுறை ஆபீஸிலிருந்து அன்னையின் சக்திஎன்ற ஸ்தாபனத்தோடு தொடர்புகொள்ளலாம்’’ - அப்போது அன்னையின் பாதுகாப்பு தவறாமல் கிடைக்கும்என்று



பாதுகாக்கப்பட்டவர்களும், பாதுகாப்பு தேவையானவர்களும் அறிய வேண்டும். நம் விருப்பம் அன்னையை நாம் அறிய விரும்பும் விருப்பமாக இருக்கவேண்டும். விரும்பியபிறகு அன்னையை அழைத்துச் செயல்பட வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் நமக்கு வரும் ஆபத்து, கஷ்டங்கள், நஷ்டங்களிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ளலாம். பாதுகாப்புஎன்ற காகிதப்பூக்களை பிரசாதமாக நம்முடன் வைத்திருந்தாலும் பாதுகாப்பு கிடைக்கும். அன்னையின் சூழலிலிருந்தால் பாதுகாப்போடு அதிர்ஷ்டமும் நம்மை வந்து அடையும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எல்லாவற்றையும் தன்பால் ஈர்த்துப்பிடிக்கும் அமைப்பும் சக்தியும் கொண்டது அகந்தை. அதன் அமைப்பு பூரணமானது. சுதந்திரத்திற்காக வேலை செய்தாலும் விலங்குகளையே உற்பத்தி செய்யும் திறனுடையது.

***விலங்கை உற்பத்தி செய்யும் சுதந்திரம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கண் எதிரேயுள்ள வாய்ப்பைக் கண்டுகொள்ளாமலிருப்பது கண்மூடித்தனம். அதிலிருந்து மீண்டு வந்து அந்த வாய்ப்பு கிடைக்கவேண்டும்என நினைக்கும்பொழுது அது நமக்கு எட்டுவதில்லை. நம்மை அது புறக்கணிப்பதைக் காண்போம். கிடைக்கவில்லையேஎன்ற ஏக்கம் ஆர்வத்தின் ஆரம்பம். "புறக்கணிக்கப்படுகிறேன்" என்ற உணர்வு புத்தி வந்ததின் அறிகுறி.

***புறக்கணிக்கப்படுவதின் புனிதம்.***

# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

N. அசோகன்

1. ஆனந்தத்தை அனுபவிக்க விரும்புகின்றவர் ஆசையையும், அதனுடைய இரட்டைப் பலன்களான இன்பம் மற்றும் வேதனைஎன்று இவ்எல்லாவற்றையும் தாண்டி வரவேண்டும்.
2. நமக்குள்ளே சுதந்திரமான உணர்வாகத் தெரிவது வெளியே அனந்தமாகத் தெரிகிறது.
3. மௌனம் சிந்தனையைவிடப் பெரியது. சிந்தனையைவிட மௌனத்தின் மூலமாக உள்எழுச்சி அதிகமாக வரும்.
4. எல்லா இயக்கங்களும் ஒரு நிரந்தர மௌனத்தில் இருந்து பிறக்கின்றன. மௌனம்என்பது எனர்ஜி நிலைப்பெற்றிருப்பதை குறிக்கும். இந்த நிலையான ஸ்தானம்தான் இயக்கத்தின் ஆதாரம் ஆகும்.
5. மானிட நிலையில் சேகரம் செய்து வளர்ச்சியைப் பெறுகிறோம். ஆனால் தெய்வம் இதற்கு நேர்மாறாக தன்னைப் பிறருக்கு வழங்குகிறது. முன்னதைவிடப் பின்னது சிறந்தது.
6. ஓய்வு எனர்ஜியை சேகரம் செய்கிறதுஎன்பது ஓர் உண்மை. இதைவிடப் பெரிய உண்மைஎன்னவென்றால் நாம் எனர்ஜியை செலவுசெய்யும் அளவுக்கு கூடுதலாக எனர்ஜியைப் பெறுவோம்.
7. பிரச்சினைகளும் வாய்ப்புகளும் எதிர்மாறானவைகளாகத் தோன்றினாலும் உண்மையில் அவை ஒன்றுக்கு ஒன்று உதவக்கூடிய உடன்பாடுகளாக செயல்படுகின்றன.
8. மானிட அன்பு உரிமைக் கொண்டாடக்கூடியது. தெய்வீக அன்பு உரிமைக் கொண்டாடாதது. உரிமை கொண்டாடுவதையும் பிரதிபலன் எதிர்பார்ப்பதையும் தாண்டி வந்தால்தான் நாம் இறையன்பைப் பெறவோ, வெளிப்படுத்தவோ முடியும்.



9. சூட்சுமநிலை ஜடநிலையைவிட அதிக உற்பத்தித்திறன் கொண்டது. உடம்பைவிட அறிவு அதிகம் சாதிப்பதே இதற்குச் சான்று.
10. சாதனையின் நிலை உயர, உயர அதைப் பறைசாற்றும் ஆர்ப்பாட்டம் குறைந்துகொண்டே வரும்.
11. சத்தியஜீவியம்என்பது ஓர் உண்மையான ஜீவிய நிலையாகும். அந்நிலையில் அறிவும் உறுதியும் ஒன்றுபட்டு இருக்கும். மேலும் சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தினுடைய வெளிவடிவமாகும். சச்சிதானந்தத்தில் உள்ள சத்என்பது சத்தியஜீவியத்தில் சத்தியமாகவும், சித் அறிவாகவும், ஆனந்தம் அனந்தமாகவும் மாறுகின்றது.
12. நாம் தெய்வீக அன்னைஎன்று சொல்பவர் இறைவனுடைய செயல்படும் சக்தியாக உள்ளார். சித்சக்திதான் அவருடைய பிறப்பிடம்.
13. அன்னையினுடைய மகேஸ்வரி அம்சம் அவருடைய விவேகத்தைக் குறிக்கும். மகேஸ்வரி மனிதர்களை அவர்களுடைய சுபாவத்திற்கேற்பக் கையாண்டு அவர்களுக்கு ஒத்துப்போகின்ற வகைகளில் அவர்களுடைய திருவுருமாற்றத்தை விரைவுபடுத்துகின்றார்.
14. அன்னையினுடைய மகாகாளி அம்சம் அன்னையின் சக்தியைக் குறிக்கின்ற அம்சமாகும். அவர் தம்முடைய இறைபலத்தை பயன்படுத்தி இறை விரோத சக்திகளை முறியடிக்கின்றார். இப்படி இறை விரோத சக்திகளை அழிப்பதன்மூலம் பரிணாம வளர்ச்சியை விரைவுபடுத்துகிறார்.
15. மகாலட்சுமி அம்சமாவது அன்னையினுடைய அன்பு, அழகு, சுமுகம் ஆகிய அம்சங்களைக் குறிக்கும். இவைகளைப் பூவுலகத்தில் வெளிப்படுத்துவதுதான் மகாலட்சுமியின் நோக்கமாகும்.
16. மகாசரஸ்வதி அம்சம் அன்னையினுடைய வேலைத்திறனைக் குறிக்கும் அம்சமாகும். அவர் எல்லாவற்றையும் நிர்மாணித்து அவருடைய வேலையில் நேர்த்தியை வெளிப்படுத்துகிறார்.
17. அன்னையினுடைய ஆனந்த அம்சம் தற்பொழுது பின்னணியில் இருக்கிறது. அன்னையின் மற்ற நான்கு அம்சங்களும் திருவுருமாற்றத்திற்கான வேலையை முடித்தபின்னர் இந்த ஆனந்த அம்சம் வெளிப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

18. பிரம்மம்என்பது எல்லா வெளிப்பாடுகளையும் தாண்டியது. அது எதற்கும் கட்டுப்பட்டதில்லை. குணம், இடம், காலம்என்று எந்த அம்சங்களும் அதற்கு இல்லை. எந்த அம்சமும் அதற்கில்லைஎன்பதால் அது எல்லாமாகவும் மாறக்கூடியது.

19. படைப்பின் முதல் வெளிப்பாடு சத் ஆகும். சத் தன்னை தெரிந்துக்கொள்ள முயன்றபொழுது சித் உருவாயிற்று. சத் தன்னை அனுபவிக்க முயன்றபொழுது ஆனந்தம் உருவாயிற்று.

20. அசத்என்பது படைப்புக்குள் இன்னும் வாராத பிரம்மத்தின் அம்சத்தைக் குறிக்கிறது. இது சத்தைவிடப் பெரியது. அதற்கு எதிர்மாறானதும்கூட. சத் தலைகீழாக மாறி ஜடமாக மாறும்பொழுது அதுவும் அசத்என்று அழைக்கப்படுகின்றது.

21. சத்திற்கு சத்தியம் மற்றும் ஒற்றுமைஎன்ற இரண்டு வெளிப்பாடு உண்டு. சித்திற்கு அறிவு மற்றும் சக்திஎன்ற இரண்டு வெளிப்பாடு உண்டு. ஆனந்தத்திற்கு இன்பம், அழகு, அன்பு என்ற மூன்று வெளிப்பாடுகள் உண்டு.

22. சத் ஜடமாகவும், சித் உயிராகவும், ஆனந்தம் சைத்தியப்புருஷனாகவும், சத்தியஜீவியம் மனமாகவும் மாறுகின்றது.

23. சித்திலுள்ள அறிவு அம்சம் அதனுடைய மற்றோர் அம்சமான உறுதி அம்சத்தின்மேல் செயல்படும்பொழுது உறுதி நகர்ந்து அதனால் ஒரு சக்தி பிறக்கின்றது. அப்படி வெளிப்படும் சக்தியைத்தான் நாம் உயிராகவும் வாழ்க்கையாகவும் அறிகிறோம்.

24. இப்படி அறிவு உறுதியின்மேல் செயல்படும்பொழுது உறுதிக்குள்ளேயே புதைந்துவிட்டதுஎன்றால் அறிவு ஜடமாக மாறுகின்றது. ஆகவே ஜடம் என்பது தன்னையறியாத உறுதியாகும்.

25. சத்தியஜீவியம் பகுத்துணரும் அம்சம், முழுமையாக உணரும் அம்சம் என்று இரண்டு அம்சங்களாக உடையும்பொழுது இவ்விரண்டு அம்சங்களுக்கு உள்ள இடைவெளியில் மானிட அறிவு பிறக்கிறது.

*தொடரும்.....*

❀❀❀



# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*

**அன்னைக்குக் கோடி நன்றிகள்:**

நான் அன்னையை 99ஆம் ஆண்டு முதல் வணங்கிவருகிறேன். அதனால் நானும் எனது குடும்பமும் பெற்ற பலன்கள் ஏராளம். முக்கியமானவற்றை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

குழந்தையில்லாமல் ஏழு வருடம் கஷ்டப்பட்ட என் தங்கைக்கு அன்னையின் அருளால் குழந்தை பிறந்தது. 26 வயதுவரை திருமணம் நடைபெறாத என் இரண்டாவது தங்கைக்கு நல்ல வரன் கிடைத்து, திருமணம் நடைபெற்றது. அடுத்த ஒரு வருடத்தில் குழந்தை பிறந்தது. அன்னையின் அருளால் ஒரு சொத்து வாங்கி, அவற்றைத் தக்க தருணத்தில் விற்று, அதன்மூலம் எங்களை கோடீஸ்வரராக ஆக்கியது. இவற்றிற்கெல்லாம் மகுடம் சூட்டியதுபோல் அன்னையிடம் வந்ததால், தீராமல் நீண்டநாள் இருந்த என் உடல் குறை பிரச்சினையை சற்றும் எதிர்பார்க்காதவகையில் புதிய வழியில் நிரந்தரமாக தீர்க்க அன்னை அருள் செய்தார். இவை அனைத்தையும் முடித்துக் கொடுத்தது அன்னையின் அருள். மேலும் அன்னையை ஏற்றபின் நடப்பவை அனைத்தும் நல்லவையே. அன்னையிடம் நம்பிக்கையுடன் சரண் அடைந்தால் தக்க தருணத்தில் கைதூக்கிவிடுவார் என்பது உறுதி.

நாம் அருகிலுள்ள தியானமையம் சென்று வரவேண்டும். அங்குள்ள புத்தகங்கள்மூலம் அன்னை எனக்குத் தொடர்ந்து வழிகாட்டி அருள் புரிந்தார். நமக்கு வழி தெரியாதபொழுது, மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டிக்குக் கடிதம்மூலம் தொடர்புகொண்டு அன்னையின் அருளைப் பெற வழியை நாடலாம். மேலும் அன்னையின் அருள் தொடர்ந்து செயல்பட நாம் அதிக விழிப்புடன் நம் குறைகளை வலியுறுத்தாமல் மனதை உண்மையால் நிரப்பி வழிபடவேண்டும். நாம் அன்னையை அடையவேண்டுமானால் சத்தியம் மட்டும் தேவை. அன்னைஎன்றால் சத்தியம்என்பது உண்மை.

❀❀❀

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**895) இந்த ஞானத்தை ஜீவனில் உணர்வது, உணர்ந்து, உடலின் சொரணையையும் அழிப்பது, தார்மீக உணர்வை திருவுருமாற்றம் செய்வதாகும்.**

*சொரணை அழியும் திருவுருமாற்றம் அற்புதத்தைக் காட்டும்.*

போட்டி, பொறாமை, சொரணை, 'எதிரி', 'மரியாதை' என்பது சாதாரண மனிதனுக்கு. இலட்சியவாதிக்கு இலட்சியம் பூர்த்தியாகவேண்டுமானால் போட்டி, பொறாமை, சொரணை, 'எதிரி', 'மரியாதை' ஆகியவை பறந்துவிடும். இலட்சியம் நிற்கும். ஆண்டவன் ஆணைஎன்றவுடன் தன்னுயிரும், மகன் உயிரும் அர்த்தமற்றவையாகிவிட்டன. மனைவியின் கற்புக்கும் சொரணையழிந்துவிட்டது. மோட்சம் இலட்சியம். அதன் எதிரே எல்லா இலட்சியங்களும், சொரணைகளும் அழிகின்றன. பரம்பரை எதிரிகள், பரமஎதிரிகள் எலக்ஷனில் சேர்ந்து உறவாடுகின்றனர். பத்து வருஷமாக எவருடைய பேரைக் காதால் கேட்க முடியவில்லையோ, இன்று அவருக்குப் பதவி வந்துவிட்டால், பணம் வந்துவிட்டால், அவர் அழைப்பின்றி அவருடன் மனிதன் போய்ச் சேர்ந்துகொள்கிறான். சொரணை தடையாக இருப்பதில்லை. இது சரியா, நல்லதாஎன்பதைவிட மனிதனால் சொரணையைக் கடக்கமுடியும்என்பது இந்நிகழ்ச்சி கூறுகிறது. ஆசைக்குச் சொரணை அழிவதுபோல் ஆண்டவன்மீதுள்ள பக்திக்குச் சொரணையழியும்என்பது தலைப்பு.

✡ ருசியற்ற பொருளைத் தொடர்ந்து சாப்பிட்டால், அதுவே ஒரு ருசியாக மாறும்.

✡ மண்ணாங்கட்டியைக் கணவனாக ஏற்றுக்கொண்டால் நாளடைவில் அவன்மீது பாசமும், பக்தியும் எழும்என்பது மனிதச் சுபாவம்.



✡ பூண்டு, வெங்காயம், முட்டை, மாமிசம் பேர் கேட்டாலே தாங்காது என்பவர் அவற்றைச் சாப்பிட ஆரம்பித்தால் அவை ருசிக்கும். அதில்லாமல் முடியாதுஎன்ற நிலைக்கு ருசி வரும். சுட்ட அப்பளம், வற்றல்குழம்பை மனிதன் சாப்பிடமுடியாது. பெரிய விருந்தைப் பலநாள் சாப்பிட்டவர் வீட்டிற்கு வந்து வற்றல்குழம்பைச் சாப்பிட்டுவிட்டு இதுதான் நாக்கு கேட்கிறதுஎன்றார். வறுமைக்குரிய உணவு பல தலைமுறை வறுமையால் பழக்கமாகி, ருசியாகவே மாறிவிட்டது; இது சுபாவம்.

✡ விஷம் அமிர்தமாவது திருவுருமாற்றம். விஷத்திற்கு ஆன்மாவுண்டு. அதுவும் வளரும். விஷத்தின் ஆன்மா வெளிவந்து வளர்ந்தால், விஷம் அமிர்தமாகும்.

நாற்றத்திற்கு ஆன்மாவுண்டு. அது வெளிவந்து வளர்ந்தால் அது மல்லிகை மணமாகும், இனிக்கும்.

✡ ஆசையால் மாறுவது மட்டமான சுபாவம்.

அவசியத்தால் மாறுவது மனிதச் சுபாவம்.

ஆன்மா வெளிவந்து மாறுவது திருவுருமாற்றம்.

எளிய செயலில் திருவுருமாற்றத்தைக் காணமுயன்றால் நாற்றம் மணமாகவும் மாறும்; கசப்பு இனிப்பாகும்; வலி ஆனந்தமாகும்; விஷம் அமிர்தமாகும்.

பூண்டும் வெங்காயமும் ருசிப்பதும், இனிப்பதும் அன்னை பக்தி அம்சமாக வெளிவந்து திருவுருமாறுவதாகும்.

மாமிசமும் காய்கறியும் ஒன்றே.

❀❀❀

**896) படபடப்பு சக்தியாவது, தீமை நல்லதை உயர்ந்த நல்லதாக்குவது, பிரிவினை பேரானந்த இனிமையை மீண்டும் கண்ட ஒற்றுமையால் காண்பது ஆகியவை நம் வாழ்விலும் உணர்விலும் காணும்வரை வெறும் சொற்களாகவே இருக்கும். உள்ளிருந்து ஆன்மா எழுந்து ஜடத்தை ஆட்சி செய்யும்வரை இதன் உண்மை புரியாது.**

*ஜடத்தை ஆன்மா ஆட்சி செய்தால் படபடப்பு சக்தியாகும்.*

செல்வாக்குள்ள குடும்பங்களில் அனைவரும் அனைத்து விஷயங்களிலும் கட்டுப்பட்டிருப்பார்கள். சொல்லைத் தட்டி நடப்பது அக்குடும்பம் அறியாது. அப்படி நடந்து, கண்டிக்கவேண்டிய அவசியம் எழாது. அக்குடும்பத் தலைவர் புறப்படும்பொழுது கார் ஸ்டார்ட் ஆகவில்லைஎனில், அது அவருடைய கட்டுப்பாட்டிலில்லை. கெடுபிடியுள்ள இடத்தில் பயந்து டிரைவர் அதையும் கவனித்து முதலிலேயே சரியாக வைப்பதுண்டு. அதற்கு கெடுபிடி மிகக்கடுமையாக இருக்கவேண்டும். அங்கும் புறப்படும்பொழுது ஒரு போன்கால் வந்து புறப்படுவது தடையாவது அவர் கையிலுமில்லை; எவர் கையிலுமில்லை. அந்த வீட்டிலும், "தடை, கார் ஸ்டார்ட் ஆகவில்லை, போன்கால் வருகிறதுஎன்பவை 5 வருஷமாக இல்லை. இப்பொழுது வருகிறது" என்று சொல்லக் கேட்கலாம். அப்படிப்பட்ட கன்ட்ரோல் ஜடம் கட்டுப்படுவதாகும். நாம் செய்யவேண்டிய கடமைகளை, *ஜடத்திற்குரிய கடமைகளைச்* செய்தால் ஜடம் கட்டுப்படும். புத்தகம், பக்கட், துணி, பெஞ்ச் போன்றவற்றை நன்றாகத் துடைப்பது, அடுக்கிவைப்பது, தூக்கிப் போடாமலிருப்பது, சத்தமாக 'டமால்' என வைக்காதது, காரை தினமும் கழுவுவதை நன்றாகச் செய்வது, புத்தகத்தில் கிறுக்கி எழுதாமலிருப்பது போன்றவை ஜடத்திற்குரிய கவனம். கவனம் கணிசமானால் ஜடம் கட்டுப்படும், ஒத்துழைக்கும்; குறுக்கே வாராது. குறுக்கே வருகிறதுஎனில், "என்னை நீ சரியாகக் கவனிக்கவில்லை" என அப்பொருள் கூறுவதாகும். பொருள்களைக் கவனிக்கப் பொறுமை வேண்டும். பொருள்களில் ஆன்மா உண்டுஎன்ற அறிவு பொறுமை தரும். அப்பொறுமை, கவனம், ஜடத்தை ஆட்சிசெய்யும்; தடையை விலக்கும். அந்நிலையில் தடையால் எழும் படபடப்பு மாறி power சக்தியாகும்.

- ✡ ஞானம் - ஜடத்தில் ஆன்மாவுள்ளது - சக்தியெழ உதவும்.
- ✡ இந்த ஞானம் பெற பிற பொருள்களை அலட்சியம் செய்யக்கூடாது. பயன்படுத்தும் பொருள்களை பவித்ரமாகக் கருதவேண்டும்.
- ✡ பொருள்களைப் பவித்ரமாகக் கருதும்முன், பிறரைப் பவித்ரமாகக் கருத வேண்டும்.
- ✡ அதுவே பிறர் கண்ணோட்டம்எனப்படும்.



- ✡ செயலுக்குமுன் யோசனை பிறந்தால், அதாவது அறிவு செயல்பட்டால், ஆத்மா மேலெழ வாய்ப்புண்டு.
- ✡ அறிவு செயல்படவேண்டுமானால், உணர்ச்சி நம்மை மீறக்கூடாது.
- ✡ உணர்ச்சி கட்டுப்படுவது பண்பு.
- ✡ அது உயர்வது பக்குவம்.

தொடரும்.....

❀❀❀

## ஜீவிய மணி

**அகந்தை அழிந்தால் அகண்டத்தின் அமைதி எழும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அறியாமை நஷ்டத்திற்கு வித்து. அதை வலியுறுத்துவது ஆபத்தை விளைவிக்கும்.

***நாம் வலியுறுத்தும் அறியாமை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

விற்பனைக்குரிய பலரும் பயன்படுத்தும் ஒரு பொருளை, பிரம்மத்தை வெளிப்படுத்தும் பொருளாகக் கண்டுபிடிக்க முடியும். உலகம் அதை உடனே ஏற்கும். அன்னையை உலகுக்கு அளிக்கும் முறை அது.

***அன்னைக்குரிய பிரம்மம்.***

# புது வரவு

டி.எஸ். ஜெயந்தி

கையில் சாப்பாட்டுக்கூடையுடன் கஸ்தூரி மருத்துவமனை படிக்கட்டுகளில் மெதுவாக ஏறிக்கொண்டிருந்த ஜெயா குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

“ஹலோ மேடம், எப்படி இருக்கீங்க?”

“நீங்க டிரைவர் முருகனோட ப்ரெண்டு ரமேஷ் இல்ல. நீங்க எப்படி இங்க.....?” என்றாள் ஜெயா.

“அட, என் பேரைக்கூட நல்லா ஞாபகம் வெச்சிருக்கீங்களே! ஆமாம் நீங்க இங்க.....?” என்று இழுத்தான் ரமேஷ்.

“என் வீட்டுக்காரருக்கு ஒரு வாரமா டெம்ப்ரேச்சர் குறையவே இல்லை. அதான் இங்க அட்மிட் செய்திருக்கோம்” என்றாள் ஜெயா.

“மேடம், என் மனைவி சித்ராவை இங்க டெலிவரிக்காக அட்மிட் செய்திருக்கேன்”.

“அது சரி ரமேஷ், உங்க வீடு திருவள்ளூர்ல இருக்கறதா சொன்ன ஞாபகம். அங்க இருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க” என்று கேட்டாள் ஜெயா.

“டாக்டர் வள்ளி எங்களுக்கு ரொம்ப வருஷமா பழக்கம். நல்ல கைராசிக்காரர். அதனாலதான் இவ்வளவு தூரம் வந்திருக்கோம்” என்று கூறினான் ரமேஷ்.

பேசிக்கொண்டே இருவரும் நடக்க, “மேடம், இதுதான் என் மனைவி சித்ரா இருக்கற வார்டு. வாங்க மேடம், அறிமுகம் செய்துவைக்கிறேன்” என்று ஜெயாவை அழைத்துச்சென்றான் ரமேஷ்.



“சித்ரா, இவங்க என் ப்ரெண்டு முருகனோட ஆபீஸ்ல வேலை பாக்கறாங்க. ரொம்ப நல்லவங்க. முருகனுக்கு உடம்பு சரியில்லாம இருந்தபோது மெடிக்கல் கார்டு வாங்கிக்கொடுத்து ரொம்ப உதவி செய்தாங்க. ஆஸ்பத்திரிக்கு வந்து பாத்தாங்கன்னு சொல்லி இருந்தேனே. அவங்கதான் இவங்க” என்று ஜெயாவைத் தன் மனைவி சித்ராவிற்கு அறிமுகப்படுத்திவைத்தான் ரமேஷ். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு மறுநாள் காலை வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றாள் ஜெயா.

மறுநாள் ரமேஷைத் தன் கணவன் ரமணி இருக்கும் அறைக்கு அழைத்துச் சென்று அறிமுகப்படுத்திவைத்தாள் ஜெயா. ரமணியின் கையில் இருந்த அன்னையின் புத்தகத்தைப் பார்த்த ரமேஷ் “என்ன சார் புத்தகம்? இவங்க யாரு?” என்று கேட்டுவிட்டு பதில் வருவதற்கு முன்பே ஜெயாவிடம், “மேடம், நீங்க எனக்கு ஓர் உதவி செய்யணும். சித்ராவுக்கு டெலிவரியாக இன்னும் 10-15 நாட்கள் ஆகும்னு டாக்டர் காலையில சொன்னாங்க. மறுபடியும் திருவள்ளூர் போய் திரும்பி வரது சிரமம். அதனால இங்க ஒரு ரூம் பாத்துக்கொடுத்தீங்கன்னா 15 நாள் இருந்து டெலிவரி ஆனப்பறம் திருவள்ளூர் போகலாம்னு நினைக்கிறேன்” என்றான் ரமேஷ்.

“அதுக்கென்ன, பக்கத்துல தந்தி ஆபீஸ்ல என் ப்ரெண்ட்ஸ் இருக்காங்க. ஏதாவது ரூம் கிடைக்குமான்னு விசாரிக்கச் சொல்லிட்டு வரேன்” என்ற ஜெயா தன் கணவனிடம், “நான் வரதுக்குள்ள ரமேஷுக்கு அன்னையைப் பற்றி சொல்லுங்க. அவங்க நினைச்சா ரூம் பாக்கற வேலையே இல்லாம செஞ்சுடுவாங்க” என்று சிரித்துக்கொண்டே சொல்லி விட்டுச் சென்றாள் ஜெயா.

தந்தி ஆபீஸ்வரை சென்றுவிட்டு, திரும்ப கணவன் இருந்த ரூமுக்குள் நுழைந்த ஜெயா ரமேஷின் கையில் இருந்த அன்னையின் புத்தகத்தைப் பார்த்தவுடன் ‘ஆஹா, விஷயம் முடிந்துவிடும்’ என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள்.

மாலை மூன்று மணி இருக்கும். சித்ரா எப்படி இருக்கிறாள்என்று பார்க்க அவள் அறைக்குச் சென்றாள் ஜெயா. இப்பொழுது சித்ராவின் கையில் அன்னை புத்தகம். பின் அட்டையில் இருந்த அன்னையின்

பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டிருந்தாள் சித்ரா. சிறிது நேரம் அவளுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டுக் கணவன் இருந்த அறைக்குத் திரும்பினாள் ஜெயா.

சுமார் நாலரை மணிக்கு ரமேஷ் ஓடிவந்து ‘‘மேடம், கொஞ்சம் சித்ராவை வந்து பாருங்க. ஏதோ சொல்ல வருகிறாள். அவள் தாயில்லாத பெண். நல்லபடியாக டெலிவரி ஆகவேண்டும்’’ என்று படபடத்தான் ரமேஷ்.

ஜெயா மனதிற்குள், ‘தாயில்லாப் பெண்ணா? தாய்க்குத் தாயான அன்னையை அல்லவா ஏற்றுக்கொண்டிருக்கிறாள். கண்டிப்பாக சுகப்பிரவசம்தான்’’ என்று கூறிக்கொண்டாள்.

“சித்ரா எப்படியிருக்க? என்னம்மா செய்கிறது” என்று கேட்டாள் ஜெயா.

“மேடம், எனக்கு லேசாக டிஸ்சார்ஜ் ஆகிறது” என்றாள் சித்ரா. ‘ஆஹா! அன்னையின் அருள் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது’ என்று சந்தோஷப்பட்டாள் ஜெயா. நர்ஸைக் கூப்பிட்டாள் ஜெயா. நர்ஸ் சித்ராவை லேபர் வார்டுக்கு அழைத்துச்சென்றார். சிறிது நேரம் கழித்து வெளியே வந்த நர்ஸ், ‘‘எப்படியும் மறுநாள் காலைக்குள் டெலிவரி ஆகிவிடும்’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

ரமேஷ், ‘‘என்ன மேடம் இது. இன்று காலையில்கூட டாக்டர் கண்டிப்பாக இன்னும் 10, 15 நாட்கள் ஆகும்என்றாரே. சித்ராவை அழைத்துக்கொண்டு போய்விடச் சொன்னாரே. நீங்க காண்பித்த தெய்வத்திற்கு இவ்வளவு சக்தியா?’’ ஆச்சரியத்தால் ரமேஷ் துள்ளிக் குதிக்காத குறைதான்.

ஜெயாவுக்கு ஆச்சரியமில்லை. இதைப்போல் அன்னை எத்தனை, எத்தனை அற்புதங்களை நடத்தி இருக்கிறார்.

“ரமேஷ் நான் வீட்டிற்குக் கிளம்புகிறேன். குழந்தைகள் காத்துக் கொண்டிருப்பார்கள். சித்ராவுக்குக் குழந்தை பிறந்த உடனே எனக்கு போன் செய்யுங்கள். காலையில் வந்துவிடுகிறேன்’’ என்று சொல்லி விட்டுக் கிளம்பினாள் ஜெயா.

காலையில் சமையலறையில் மும்முரமாக வேலை செய்து



கொண்டிருந்த ஜெயாவின் காதில் விழுந்தது டெலிபோன் மணிஓசை. ரமேஷேதான்.

‘‘மேடம், என்ன ஆச்சரியம்! என்ன அற்புதம்! எனக்கு ஏழரை மணிக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது, சுகப்பிரவசம். டாக்டரின் கணிப்பு தலைகீழாயிட்டுதே’’ படபடவென்று பொரிந்துகொட்டினான் ரமேஷ்.

‘‘இது நான் எதிர்பார்த்ததுதான். இதோ நான் கிளம்பி வந்து கொண்டே இருக்கிறேன்’’ என்றாள் ஜெயா.

ஆஸ்பத்திரி வாசலிலேயே வாயெல்லாம் பல்லாக நின்று கொண்டிருந்தான் ரமேஷ். “மேடம், இப்பதான் ரூம் குடுத்திருக்காங்க. குழந்தையை நீங்களே ரூமுக்கு எடுத்துட்டு வாங்க மேடம்” என்றான் ரமேஷ். இருவரும் பேசிக்கொண்டே லேபர் வார்டுக்கு வந்தனர்.

அப்பொழுதுதான் பூத்த ரோஜாப்பூவைப்போல் இருந்த குழந்தையை நர்ஸ் ஜெயாவின் கையில் கொடுத்தாள். அதன் ஸ்பரிசத்தில் மெய் சிலிர்த்தாள் ஜெயா. அன்னைக்கு மனதால் நன்றி கூறிவிட்டு “குழந்தைக்கு ‘அரவிந்த்’ என்று பெயர் வையுங்கள் ரமேஷ்” என்றாள்.

‘‘அதென்ன மேடம், உங்க சார்கூட இதே பெயரைத்தான் சொன்னார்” என்று ஆச்சரியப்பட்டான் ரமேஷ். குழந்தையைத் தாயின் அருகில் விட்டுவிட்டு விடைபெற்றாள் ஜெயா.

டாக்டர் ஜெயாவின் கணவருக்கு உடம்பு சரியாகிவிட்டதால் இரண்டு நாட்களில் டிஸ்சார்ஜ் செய்துவிடுவதாகக் கூறினார்.

மறுநாள் ரமேஷ் ஜெயாவிடம் ‘அன்னை தரிசனம்’ புத்தகத்தை வாங்கித் தரச்சொல்லி எடுத்துக்கொண்டு சித்ராவையும், குழந்தை அரவிந்தையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

அவர்களுக்கு விடை கொடுத்துவிட்டு, அவர்கள் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்த ஜெயா, ‘அன்னையே! யாரோ ஒருவர் உங்களை அறிந்துகொள்வதற்காக எங்களைக் கருவியாகப் பயன்படுத்தினீர்-களோ? அதற்காகவே என் கணவருக்கு இந்த சுரத்தைக் கொடுத்தீர்-களோ? என்னே எங்கள் பாக்கியம்!’ என்று மனதிற்குள் கூறிக் கொண்டாள்.

❀❀❀

# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**35. ஆழத்தில் ஜீவன் விழைவது கிடைக்கும்.**

ஆழத்தில் அனைத்தும் உள்ளன.

அங்குக் கேட்டுப் பெற ஒன்றில்லை.

கேட்டால், கேட்டது கேட்டபடி கிடைக்கும்.

நாம் ஆழத்திலில்லை.

எப்படி ஆழத்தை அடைவது?

ஒரு பெரிய நாய் துரத்தும்பொழுது ஓடுபவன் எதை நினைக்கிறான் - ஓடித் தப்பிக்கமட்டுமே அவனுக்கு நினைவுண்டு.

முதன்மந்திரி வலம் வரும்பொழுது உன்னைக் கண்டு, நின்று, அழைத்துப் போய் மந்திரி சபையில் சேர்க்க முடிவு செய்தால், வேறு எது நினைவு வரும்?

ஆபத்தும், ஆனந்தமும் ஆழத்திற்குப் போய் அனைத்தையும் மறந்து விடும்.

அன்னை ஆபத்தையும், ஆனந்தத்தையும் கடந்தவர்.

அப்படி அன்னையை நினைத்தால் உலகம் மறந்து, பரவசம் எய்தும் நேரம், ஆழத்தின் வாயில் திறக்கும்.

திறந்த வாயிலினுள் நுழைந்த மனிதன் திரும்பிப் பார்க்காமல் சென்றால் ஆழத்தின் வாயில் திறக்கும்; வாயிலைத் திறக்கலாம்.

நுழையவும் முடியும். திறந்த வாயிலே குரல் கொடுத்து அழைக்கும்.

**மனிதன் திரும்பாமல் செல்வது மனத்தின் முடிவு.**

வாயில் திறப்பது அருள்.

உள்ளே நுழைவது அருள்.

திரும்பிப் பார்க்காமல் நெறியாகச் செல்வது நம்பிக்கை, பக்தி, உறுதி.



உறுதியுடையவர்க்கு உயர்வு உறுதியாகக் கிடைக்கும்.

பெரிய விஷயத்தில் முயல்வது பெருநெறி.

எங்கு முயன்றாலும் பலன் ஒன்றே.

முடிந்த இடத்தில் முயன்றுபெறுவது வெற்றி.

பெற்ற வெற்றிப் பெரியதற்கு வழிசெய்யும்.

வாயிலைக் கடந்தபின் வாழ்வின் ருசி இழுக்கும்.

அருள் மேலே அழைக்கும்.

கீழே போக விரும்புபவனை அருள் தடுக்காது.

அருள் அதையும் செய்ய பூர்வஜென்மப் புண்ணியம் தேவை.

எப்பொழுதாவது நம்செயலை இறைவன் ஏற்றிருந்தால் அருள் அதையும் செய்யும்.

அந்த அருளும் அதை அனுதினம் செய்யாது.

மனிதன் இறைவன்.

இறைவன் பெற்ற சுதந்திரம் இவனுக்கும் உண்டு.

**சுதந்திரத்தை இழக்கும் சுதந்திரத்தை மனிதன் நாடுவது அவன் பிரம்ம உரிமை.**

அது குதர்க்கம்.

குதர்க்கம் தன்னையழித்துக்கொள்ளும் உரிமையை நாடினால், அதன் உரிமையைத் தடுக்க ஒரு சக்தியில்லை.

விகல்பமும், குதர்க்கமும் தவிர மற்ற அனைத்திற்கும் அருள் உண்டு.

அருள் ஆழத்திற்கு அழைத்துப் போகும்.

ஆழம் அனைத்துமுடையது; அருளும் உடையது.

அருள் கேட்காமல் செயல்படுவது.

**36. நினைவைக் கடந்து செல்வது.**

நினைவே மனிதன்.

நினைவு என்பது மனம்.

நினைவு நெஞ்சமாகவுமிருக்கும்.

நினைவு கண்டது, கேட்டது, அனுபவித்ததைப் பதித்திருக்கும்.

நாம் இதுவரை அனுபவித்தது இனி வரப்போவதில்லை.

இனி வரப்போவது இதுவரை நம் வாழ்விலில்லாதது.

அன்னை தரப்போவது இதுவரை அவனியிலில்லாதது.

நமக்கு வேண்டிய எதுவும் நினைவுக்குளில்லை.

அதனால் நினைவைக் கடந்து செல்லவேண்டும்.

காற்றைக் கையில் பிடிப்பது, மௌண்ட் ரோடில் போகும் போக்குவரத்தை நிறுத்துவது, பெய்யும் மழையைத் தடம் மாறி பெய்யச் சொல்வது, பிறர் நம்மைப் பற்றி நினைப்பதை நாம் நிர்ணயிப்பது, மழைக்குமுன் எழும் ஈசல் கூட்டத்தை கையால் தட்டி விலக்குவது போன்றவை நினைவைக் கடப்பது.

இது முடியாத ஒரு முறையானால், ஏன் அதைக் கூற வேண்டும்?

முடியாதுஎன்பது உண்மை. அது முடியக்கூடிய முறையுண்டு என்பதும் உண்மை.

தானே எழும் நினைவு கட்டுப்படாது.

நாமே விரும்பி, கடந்ததை நினைவுகூர்ந்து, அதை நினைத்துப் பேசி, முறையிட்டு இரசிப்பதை நிறுத்த முடியும்; அது கட்டுப்படும்.

தியானத்தில் நினைவு நிற்கும்.

தியானத்தை மேற்கொண்டால், நினைவைக் கடந்து செல்ல முடியும்.

அன்னை நினைவு, நம் நினைவைக் கடந்தது.

ஏதோ ஒரு முறையால் நினைவைக் கடந்துவிட்டால் அன்று நடப்பவை புதியதாக இருக்கும்.

1) அன்று பிரச்சினைகளிருக்கா.

2) புதிய வாய்ப்புகள் வந்தபடியிருக்கும்.

இந்த அனுபவத்தைக் கண்டவர் நினைவைக் கடக்கும் பல கட்டங்களை அறியலாம். அவை,



- ஓடும் எண்ணங்கள்,
- நாமே எழுப்பும் எண்ணங்கள்,
- உறுத்தலான கருத்துகள்,
- குற்ற உணர்வின் குறைகள்,
- ஆழ்ந்த அபிப்பிராயங்கள்,
- வெறுப்பான விருப்புகள்,
- சுபாவத்திற்குரியவை,
- ஆழ்மனம் ஏற்ற அகன்ற கருத்துகள்.

இவற்றைக் கடந்து செல்லும் முறையொன்றே.

நிலைக்கேற்பத் தீவிரம், ஆழம் தேவை.

நம் எண்ணம் நிறைவேற, பூரணமாகிப் பொலிவு பெற, இம்முறை ஒரு பொன்னான வழி.

- இதை ஆரம்பிக்க முடியாது.

  தீவிரமானவர்க்கே இது பலிக்கும்.

  முதற்கட்டம் பலித்தால், முடிவுவரை பலிக்கும்.

  முயற்சி இன்றியமையாதது.

  ஒவ்வொரு கட்டத்திற்கும் உரிய முயற்சியைத் தவறாது மேற்கொள்ள வேண்டும்.

  எளிமையாகத் தோன்றும், சிறப்பான முறையிது.

  ஏன் இதற்குச் சிறப்புண்டு?

  மனிதன் மனத்தாலானவன்; மனம் நினைவாலானது.

  எனவே நினைவே மனித ஜீவனின் ஆன்மீக மையம்.

**37. ஆழ்ந்த உறுத்தலை ஆராய்ச்சியால் கரைப்பது அல்லது எரிச்சல்படாமல் இருந்து அழிப்பது.**

உறுத்தல் என்பது உள்ளபடி உறுத்தலில்லை. நாம் ஆழ்ந்து, விரும்பி

எடுத்துக்கொள்ள வேண்டிய கருத்தாகும். அதை நாம் எதிர்ப்பதால் உறுத்தல் எழுகிறது.

உள்ளபடி உறுத்தலுக்கு உலகில் ஒரு விஷயமில்லை.

நம் குறையை ஒருவரிடம் கூறியபொழுது அந்த விஷயம் மனதில் உறுத்தலாக மாறுகிறது.

உறுத்தல் நம் இயலாமை.

உலகில் நம் நிலைமை குறைவாக இருப்பதை நாமே உணரும் நிலை உறுத்தல்.

நமக்கு அவை பிடிக்கவில்லை, ஏற்கமுடியவில்லைஎன்பதால் அது உறுத்துகிறது.

நான் விரும்பிய பெண் வேறொருவனை விரும்புகிறாள்என்பது உறுத்தல்.

நம்குடும்ப இரகஸ்யம் எவருக்குத் தெரியுமோ, அவர் நினைவு உறுத்துகிறது.

நாலுபேர் எதிரில் மானம் போன நிகழ்ச்சி மனத்திற்கு உறுத்துகிறது.

**குறை உறுத்துகிறது. குறையை விலக்கினால் உறுத்தலிருக்காது.**

ஆராய்ச்சி பலன் தரும்.

அது குறையை விலக்கும்.

அது ஒரு குறையென்று, ஆயிரம் இடங்களில் தடை செய்கிறது.

குறையை அகற்றினால், ஆயிரம் விஷயம் தலைகீழே மாறும்.

அவசரப்பட்டுத் திருமணம் செய்து, நிதானமாக அனுபவிக்கிறான் என்பது சொல்.

இப்படி அவசரப்படுபவர், பணத்தை அவசரமாக நாணயமற்றவரிடம் கொடுப்பார்; வேலை செய்யாத டெக்னாலஜியை அவசரப்பட்டு வாங்குவார்; அவசரப்பட்டுத் தேவையில்லாத ஆப்பரேஷன் செய்வார்; அவசரமாகக் குறைந்த விலைக்கு மனையை விற்பார்.

ஆராய்ச்சி அவசரத்தை உணர்த்தும்.

அவசரமான சுபாவம் மாறாது.

அன்னையை ஏற்றால் அதுவும் மாறும்.



ஏற்கனவே அவசரப்பட்டுச் செய்த திருமணத்தில் புதிய நிலையெழுந்து சௌகரியம் எழும்;

நாணயமற்றவரிடம் கொடுத்த பணம் வரும்; டெக்னாலஜி வேறொரு காரணத்தால் வேலை செய்ய ஆரம்பிக்கும்; செய்த ஆப்பரேஷன் நல்ல பலன் தரும்; குறைந்த விலைக்குப் போன மனைமூலம் வேறு ஒரு ஆதாயம் வரும்.

அவசரம் போய் பொறுமை வரும்.

இது உலகில் நடக்காதது.

அன்னையிடம் மட்டும் நடக்கும்.

அன்னையிடம் நடக்காதது இல்லை.

**அவசரமும் நிதானமாகும்.**

அவசரம் நிதானமானபின் வாழ்வு உயரும்.

நாமிருந்த நிலையைவிட்டு நாம் நுழைய முடியாத உயர்வுக்கு வருவோம்.

அவசரத்தை ஆராய்ந்ததுபோல் ஆராய ஆயிரம் உள்ளது.

சிலவற்றை ஆராய்ந்தாலும் பெரும்பலன் கிடைக்கும்.

ஆராய்ச்சி தெளிவு தரும்.

தெளிவு தெம்பு தரும்.

நம்இலட்சியம்: வந்த வாய்ப்புகளெல்லாம் பலித்து, உள்ள பிரச்சினை எல்லாம் வாய்ப்பாக மாறி, நம் வாழ்வு அன்னை வாழ்வாக வேண்டும்.

அதன் அறிகுறியாக ஒரு பெரிய நல்லது நடக்கும்.

அப்படி நடந்தால் நாம் அதுவே முடிவுஎனத் திளைப்போம்.

அதுவே ஆரம்பம்என்பது உண்மை.

ஆதாயத்தையும் அன்னைக்காகத் தேடுவது நல்லது.

அன்னையை அன்னைக்காகத் தேடும் மனநிலை, மனத்தைக் கடந்த உயர்ந்த நிலை.

உலகம் உயர்ந்ததாகக் கருதும் நிலையைக் கடந்த நிலை அன்னை நமக்களிப்பது.

அது பணத்தால், பதவியால், பிரபலத்தால் பெற முடியாதது.

பெறமுடியாததைப் பெறமுடியும் நிலை பெரிதன்றோ!

பெரியது உயர்ந்தது, உன்னதமானது.

**38. உயர்ந்த வலிமையை உயர்த்துவது.**

பேச்சுத்திறன், நிர்வாகம், பொறுமை போன்றவை சிலருக்கு உயர்வாக அமையும்.

பொறுமை ஒருவருக்கு வலிமையாகவுள்ளதுஎனில் அதை உயர்த்துவது இம்முறை.

வலிமையாகவுள்ளதுஎனில் மற்றவர்களைவிட வலிமையாகவுள்ளதுஎனப் பொருள்.

எவருக்கும் பொறுமை 10%க்குக் குறைவாக உள்ள இடத்தில் ஒருவர் பொறுமை 20% இருந்தால் அவரைப் பொறுமையின் பொக்கிஷம் என்பர். ஆனால் பொறுமையின் தரத்தைக் கருதும்பொழுது இவர் பொறுமை 80% குறைவாகவுள்ளது. இந்த 80%ஐ 1% உயர்த்துவது நடவாதக் காரியம். ஏனெனில் இந்தப் பொறுமையே நம் முழுமுயற்சியாலானது. 90 மார்க் வாங்கும் பையன் 93 வாங்க முயன்றால் அது 89 ஆவது அனுபவம். கலெக்டருடன் நெருங்கிய நண்பர் மேலும் நெருக்கத்தை உயர்த்த முயன்றால், ஒரு டெபுடி கலெக்டரிடம் அதிகத் தொடர்புகொள்ள முயன்றால், அங்கு ஆபீஸுக்குள் உள்ள கட்சி வெளிவரும். கலெக்டர் வேண்டியவர் என்பதால் டெபுடி கலெக்டர் முகம் கொடுத்துப் பேசமாட்டார். பொறுமையை உயர்த்த முயன்றால், நேற்றுப் பொறுத்துக் கொண்டவைகளை இன்று பொறுக்க முடியாதுஎனக் காண்போம். இதற்கு வழியுண்டா?

90 மார்க் மனப்பாடம் செய்து வாங்கியிருந்தால், பாடத்தைப் புரிந்து கொள்ள முயன்றால், அடுத்தது 97 மார்க் வரும். கலெக்டரிடம் பழகுபவர் மேலும் சற்று அடக்கமாக இருக்க நினைத்தால், கலெக்டர் வேண்டியவர் என்ற பெருமையோடு பேசுவதைக் குறைத்தால், டெபுடி கலெக்டர் தாமே வந்து பழகுவார். பொறுமையைக் கட்டுப்பாட்டால் அதிகப்படுத்த முயலாமல், அறிவால் உயர்த்த முயன்றால் அது 80லிருந்து 90க்குப் போகும்.



- ❀ பழைய முறை பகுதி.
- ❀ புதிய முறை முழுமை.
- ❀ எதை உயர்த்த வேண்டுமோ அதற்குள்ள அடிப்படையை வலுவாக்கு-தல் முறை.

படிப்புக்கு அடிப்படை புத்திசாலித்தனம்; பழக்கத்திற்கு அடிப்படை அடக்கம்; பொறுமைக்கு அடிப்படை நிலைமையைப் புரிந்துகொள்வது.

புத்திசாலித்தனத்திற்கும், அடக்கத்திற்கும், புரிவதற்கும் அடிப்படை மௌனம்.

மௌனம் உயர்ந்தால் அனைத்தும் உயரும்.

அதற்கு அடுத்தது ஜோதி.

அதையும் கடந்தது ஞானம்.

அதற்கடுத்தது தெய்வீகம்.

முடிவானது சத்தியஜீவியம்.

இவற்றை உயர்த்திப் பலன் பெறுவது யோகிக்குரியது.

நமக்குரியது வாழ்வு.

வாழ்வு சிறப்புப் பெற ஓர் அடி எடுத்துவைத்தால் போதும்.

அதுவே உள்ள வலிமையை ஒரு படி உயர்த்துவது.

ஒரு படியும் உயர்த்தலாம்; பல படிகளும் உயர்த்தலாம்.

நம்மால் முடிந்த அளவுக்கு உயர்வதே நம் கடமை.

அத்தனையும் மௌனத்திற்கு முந்தைய நிலைகள்.

மனம் உயர்வை நாடுவது உண்மையாக இருப்பதே அவசியம்.

மனம் அன்னையை நாடினால் உயர்வை நாடும்.

ஆன்மீகத்தில் சிறிய முயற்சி வாழ்வில் பெரிய பலன் தரும்.

யோகசக்தியை நல்வாழ்வுக்குப் பயன்படுத்துவதே கொள்கை.

நேரடியாக மௌனத்தை நாடினால், நம் முயற்சியின்றி வலிமை உயரும்.

அன்னையை அதிகமாக நாடினால் மௌனமும், அதன் பகுதியான வலிமையும் தானே நம்மை நாடும்.

அன்னை நம்மை நாடும் மனநிலையை ஏற்பது நல்லது; அதைவிட உயர்ந்தது.

மனத்தைக் கடப்பதும் உயர்ந்த முறை.

முறைகள் பல; மூலம் ஒன்று.

மூலத்தை நாடுவது சிறப்பு.

அந்த மூலம் நாமேஎன அறிவது முறைகளைக் கடந்த சிறப்பு.

## 39. நடக்கும் என்பதால் நடத்திக் கொள்ளாதே.

பொதுவாக இதைச் சரியென நினைக்கத் தோன்றும்.

மாமியார் கேட்கவில்லை என்பதால் மருமகள் எந்தப் பொறுப்பையும் ஏற்காதது, அதிகாரி கண்டிக்கவில்லை என்பதால் ஆபீஸ் முடிய 1 மணி முன்னதாக வீட்டிற்குப் போவது, கடன் கொடுத்தவர் கேட்கவே இல்லை என்பதால் திருப்பிக் கொடுக்க வேண்டாம்என்பது நம் வாழ்வை அடுத்த தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவரும்.

தலைவனாக இருக்க வேண்டியவன் தொண்டனாக இருப்பான்.

நம்மைப் போன்ற அனைவரும் அதிகாரம் செய்யும்பொழுது நாம் அடங்க வேண்டியிருக்கும்.

நட்பில், உறவில் எவற்றையெல்லாம் செய்யக்கூடாதோ அவற்றை தவறாது முனைந்து ஆர்வமாகச் செய்து ஆர்ப்பாட்டம் செய்தவருக்கு அந்த period 'திசை' முடிந்த மறுநிமிடம் எந்தப் பாதகத்தை எவருக்கும் செய்யக் கூடாதோ அவற்றை அனைவரும் ஒரே சமயத்தில் இவருக்குச் செய்தனர். ஸ்தாபனத் தலைவரிடத்திலிருந்து தொண்டருக்கும் கீழே போனார். ½ ரூபாயை மிச்சம் பிடிப்பதால் அனாவசியமாக ஒருவர் 1½ மைல் நடக்க வேண்டியிருந்தது. அதையும் ஒருவர் 6 மாதம் செய்தார். நெடுநாள் கழித்து நேரடியாகச் சம்பந்தமில்லாதவர்க்கு கார், டிரைவர், செலவு தேவையில்லாமல் வருஷக்கணக்காகக் கொடுக்க நேர்ந்தது.

**இன்று நடத்திக்கொண்டால், எதிரான காரியம் நாளை தானே தன்னை நடத்திக் கொள்ளும். இது தவறாது.**

❀ உயர்மட்டத்தில் பழகினால் நம்மை அடுத்த, அடுத்த கட்டத்திற்கு அனுப்பிக் கடைசியில் வாழ்வு வைத்துவிடும்.



அன்னையிடம் பலன் விரைவாக வரும். இதுவும் உடனே நடக்கும்.

❀ இது சரியான மனப்பான்மையில்லை. அதனால் மாறிக்கொள்வது சரி.

❀ 'எனக்கு நடக்குதே' என்பது அறிவுடைமையாகாது; அறியாமை ஆகும்.

❀ மாமனார் வீட்டு சௌகரியம், ஆபீஸ் விஷயம், கிளப் வாழ்வு, நண்பர் உதவி, உறவினர் பழக்கத்திற்கு இது நேரடியாகப் பாதகம் விளைவிக்கும்.

எவருக்கும் தெரியாமலில்லை. சௌகரியத்தை விடமுடிவதில்லை.

பிறர் பொருளைப் பெறுவது, சௌகரியத்தை அனுபவிப்பதைவிட பிறரை மட்டமாகப் பேசுவது மனிதன் இரசிப்பது.

திருப்பி பதில் சொல்லத் திராணியில்லாதவரைப் பேச வாய் துடிக்கும்.

அவர்கட்கு அது திரும்பி வாராமலிருக்காது.

நெல்லால் அடித்தால், கல்லால் அடி விழும்.

எல்லோரையும் துச்சமாகப் பேசுபவர் ஒருவரை, அவர் கடைக்கு வருபவர் அனைவரும் - சிறியவர் உள்பட - 'முருகேசா' எனப் பெயரிட்டு அழைக்கும் நிலை 1930இல் ஏற்பட்டது; தடுக்க முடியவில்லை.

**நடக்கும் என்பதால் நடத்திக்கொள்பவரை உலகம், வாழ்வு முடியும் என்பதால் அவமானப்படுத்துவர்.**

ஆபீஸுக்கு வருபவர்களை நிற்கவைத்துப் பேசுவது அநாகரீகம்.

அவரை அவர் தகுதிக்கு மேற்பட்ட இடத்தில் உட்கார வைத்தனர்.

சந்தர்ப்பம் அந்த இடத்தையே எடுத்துவிட்டது.

எது சரியோ அதைச் செய்ய வேண்டும்; எது முடியுமோ அதை முடியும் என்பதால் செய்யக்கூடாது.

## 40. மனத்தை அடிமையிலிருந்து விடுதலை செய். (உ.ம்.) பணத்திற்கு அடிமையாகாதே.

மனிதன் அடிமையாவதில் சிறப்புப் பெற்றவன்.

மண், பெண், பொன் அவனை அடிமையாக்கும்.

தாசி மடியில் படுத்திருப்பவனுக்கு தாயார் நினைவு வாராது.

மண்ணிற்கு மகத்துவம் வந்துவிட்டால் மனம் கல்லாகும்.

பொன் பொலிவு பெற்றது. அது எதிரிலிருந்தும் எவரும் கண்ணில் படுவதில்லை.

அடிமைத்தனத்தை ஆவலாக ஏற்கும் மனநிலை அடிமைத்தனத்திற்கு வலிமை தருகிறது.

பணத்தை உற்பத்தி செய்தது மனம்.

மனம் உணர்ச்சியைவிட உயர்ந்த கருவி.

உழைத்துச் சம்பாதித்தது உடல்.

உணர்ச்சி தோற்றத்தில் மகிழ்ந்து உடலையும், மனத்தையும் மறந்து தன் நிலையிழந்து பணவசப்படும் பரவசம் அடிமை.

அடிமைக்கு அவன் நிலை பூரணம் தரும்.

அவனை அவனிடமிருந்து எளிதில் காப்பாற்ற முடியாது.

உணர்ச்சி மட்டும் ஒருவனை வழிநடத்துமானால், அவன் அடிமையாகக் கூடியவன்.

அவனுக்கு அறிவிருந்து தெளிவில்லாவிட்டால், அந்த அறிவு அடிமை நிலையில் உள்ள சௌகரியங்களை அவனுக்கு எடுத்து அறிவுறுத்தும்.

**இவ்வழி உணர்ச்சி பணத்திற்கு அடிமையாகிறது;**
**மனம் உணர்ச்சிக்கு அடிமையாகி,**
**அடிமை நிலையை அசைக்க முடியாததாக்கும்.**

இது பலர் நிலை.

இந்நிலையிலுள்ளவருக்குக் கதிமோட்சம், விடுதலையில்லை.

அவர்கள் அறிவின் துணைகொண்டு உணர்ச்சியின் பிடியிலிருந்து மீள வேண்டும்.



தத்துவமாகப் புரிந்து, நடைமுறையாகச் செயலில் வரும்வரை காத்திருக்க வேண்டும்.

**புரிவது எளிது; புரியப் பிரியப்படுவது அரிது.**

புரிந்தவுடன் நாம் பணத்திற்காக அலைவது குறையும்.

புரிந்ததை மனம் ஏற்றால் 40 முறை நாம் நாடிப்போன பணம் 4 முறையாவது நம்மை நாடிவரும்.

கடன் கொடுத்து மார்க்கட்டைப் பிடித்தது மாறி, டெபாசிட் கொடுத்து சரக்கு வாங்கும் நிலை எழும்.

இது திருவுருமாற்றம்.

பெண்ணென அலைந்தது போக, பல வரன் நம்மைத் தேடி வரும்.

சற்று மாறியவுடன் மனம் மீண்டும் பழைய நிலையை நாடும்.

போக்கைக் கண்டபின் மனம் மாறாமலிருப்பது உறுதி.

நிலை மாறினால் உலகம் உன்னை நோக்கி மாறும்.

அன்பருக்குள்ள அனைத்து அருளும் செயல்படத் தேவையான பல மனநிலைகளுள் இது முக்கியமான ஒன்று.

## 41. பிடி கொடுக்காமல் பேசுவதைத் தவிர்.

பிடி நம் கையில் இல்லாவிட்டால் வாழ்வு தெளிவுபடாது.

எந்த பேரத்திலும் இரு சாராரும் தங்கள் பிடியை விடாமல் பேசுவர்.

கர்மம் செயல்படும் வாழ்வுக்கு அது சட்டம்.

அருள் செயல்படும் உயர்ந்த வாழ்வுக்கு பிடியை நாமே விட்டுக்கொடுப்பது சட்டம்.

பிடி என்றால் என்ன? வரையறைக்குட்பட்ட வாழ்வுக்குரியது பிடி.

பேச்சு எழுத்திலில்லாவிட்டால் பொய் சொல்ல வாய்ப்புண்டு.

அதனால் எழுத்து அவசியம்; அது பிடி.

அப்படிப்பட்ட பிடியை இரு முறை இரண்டு பேரிடம் விட்டுக்கொடுத்ததால் ½ பங்கு இலாபம் என்ற பேச்சு முழுச் சொத்தாகவும், 1/3 பங்கு லாபம் முழுச் சொத்தாகவும் மாறியது.

பிடியை விடாவிட்டால் உள்ளது கிடைக்கும்.

பிடியை வலிமையிருந்து பண்பாக விட்டுக்கொடுத்தால் உபரியாக வரும்.

கணவன் மனைவியிடையே இருவரும் பிடியைப் பாராட்டாவிட்டால் வாழ்வு மனம் நிறைந்த வளமாக இருக்கும்.

NPT (Nuclear Proliferation Treaty) அணுகுண்டு பரவுவதைத் தடுக்கும் ஒப்பந்தம்: அமெரிக்கா எவரும் அணுகுண்டு தயாரிக்கக்கூடாதுஎனக் கேட்கிறது. ஆனால் தான் மட்டும் அந்தச் சட்டத்திற்கு உட்படாதுஎன்று கூறுகிறது. இது பிடியை விடாமல் செய்யும் பேரம்.

> "அனைவரும் எல்லா அணுகுண்டுகளையும் அழித்துவிட்டு இனி அவற்றைத் தயாரிக்கமாட்டோம்" என்று முடிவு செய்யக் கேட்பது அறிவுடைமை; பிடியை விடுவதன்று. பிடியை விடுவது என்றால், குருஷேவ் "ரஷ்யா அணுச்சோதனை செய்யாது" என தானே செய்த முடிவு பிடியை விடுவது.

வட்டிக்கடைக்காரன் சொத்து வாங்கும்பொழுது விற்பவனை "எனக்கு இந்த விலைக்கு விற்கச் சம்மதிப்பதாக" எழுதிக் கேட்பான். ஒப்பந்தம் இருவரும் பொறுப்பேற்கவில்லையெனில் செல்லாது. பணம் பேசுகிறது. அது 'உன் பிடியை என்னிடம் கொடு' எனக் கேட்டது.

இன்று போய் நாளை வா என்பது பிடியை விடுவது.

பிள்ளைவீட்டார் எதுவும் கேட்காதது பிடியை விடுவது.

இதன் பலனை அனுபவிப்பவர் நன்றியை உணராமல் 'இப்பொழுதெல்லாம் எவரும் எதுவும் கேட்பதில்லை' என்பது பிரச்சினையை உற்பத்தி செய்வது.

பிடியை விடுவது சரி.

அதைப் பாராட்டுவது அவசியம்.

எவரிடமும் பிடியை விட்டுக்கொடுப்பவரிடம் எல்லோர் பிடியும் தானே வந்து சேரும்.

சமர்ப்பணம் என்பது நம் பிடியை விடுவதாகும்.

*தொடரும்....*

❀❀❀



# பேப்பர் கிளிப்பைக் கொடுத்து ஒருவர் இரண்டுமாடி வீடு பெற்றார்

கர்மயோகி

ஒரு பொருளைக் கொடுத்து மறுபொருளைப் பெறும் வழக்கம் மேல்நாட்டில் trade எனப்படும்.

26 வயதுள்ள மான்ட்ரீலில் வசிக்கும் இளைஞன் கூறுவது:

"என் பெயர் கைல் மாக்டொனால்ட். நான் ஒரு சிவப்பு பேப்பர் கிளிப்பைக் கொடுத்து வீடு பெற்றேன். 14 முறை கைமாறி ஜூலை 12ஆம் தேதி 2005இல் ஆரம்பித்து ஜூலை 12, 2006இல் வீடு கைக்கு வந்தது. இந்த வீடு சாஸ்காட்சிவன் என்ற ஊரில் மெயின் தெருவில் 503ஆம் நம்பருடையது. என்னைப் பாராட்டுங்கள். எல்லாச் செய்திகளும் என்னிடம் உள்ளன".

அவர் செய்தவை:

1. *மாக்டொனால்டிற்கு வேலையில்லை. வேலை தேடுவதற்குப்பதிலாக மேஜை மீதுள்ள சிவந்த பேப்பர்கிளிப்பை இன்டர்நெட்டில் கொடுத்து வேறு பொருள் பெற ( trade ) முடிவு செய்தார்.*
2. *உடனே பதில் கிடைத்தது. வான்கூவரில் உள்ள இளம்பெண் மீன் போன்ற தோற்றமுள்ள பேனாவைப் பதிலாகத் தர முன்வந்தார்.*
3. *மீன்பேனாவை சியாட்டலிலுள்ள குயவனிடம் கையால் செய்யப்பட்ட doorknob கதவுப்பிடிக்கு மாற்றிக்கொண்டார்.*
4. *மாஸஸூஸட்ஸ் ஊரிலுள்ள ஒருவரிடம் அப்பிடியை ஒரு camp stove ஸ்டவுக்குப் பரிமாறினார்.*

5. *ஸ்டவ்வைக் கொடுத்துவிட்டு 100* watt generator *ஒரு சிறிய ஜெனரேட்டர் பெற்றார்.*
6. *அதை பீயர் விளம்பரப்பலகை* beer sign*க்கு மாற்றினார்.*
7. *அதை* snow mobile*க்கு மாற்றினார். இது கண்ணாடி குளோப்.*
8. *அதை ஒரு சினிமாவில் ஒரு சிறு பாகம் நடிக்க மாற்றினார்.*
9. *கிப்லிங் என்ற நகரம் 1100 பேருள்ள இடத்தில் இரண்டு மாடி கட்டியுள்ள* farm house*யை அடுத்த முறையாக மாற்றிக்கொண்டது.*

மாக்டொனால்ட் பிரபலமானார். “இதுவே முடிவன்று. இது தொடரும்” என்கிறார். ஆன்மீகரீதியாக அனந்தம் அணுவிலிருந்து வெளிவரும் (infinite comes out of the finite). இதை நடைமுறையில் இன்டர்நெட் ஓரளவு நிரூபிக்கிறது. இதன் உள்ளுறை தத்துவங்கள்:

- ✡ **நம் பொருளின் பயன், உயர்வு, உபயோகம் நம்மைவிடப் பிறருக்குத் தெரியும்.**
- ✡ **அப்படி அறிந்தவருடன் நமக்குத் தொடர்புகொள்ள இன்டர்நெட் உதவுகிறது.**
- ✡ **சிறிது சிறிதாகப் பெருகி கிளிப் வீடாயிற்று.**
- ✡ **எந்தப் பொருளிலும் உலகம் அடங்கியுள்ளது.**
- ✡ **அதற்குரிய நேரமும், முறையும் வந்தால் உலகம் அதிலிருந்து எழும்.**
- ✡ **இதிலிருந்து நாமறியக்கூடியவை பல. அவற்றுள் இரண்டு,**
  - ❀ **நாம் யார்என அறிந்தால் நம் நிலை 10 அல்லது 100 மடங்கு உயரும்.**
  - ❀ **நம் கையிலுள்ள பணம் 10 அல்லது 1000 முறை பெருக இந்த ஞானம் பயன்படும்.**

❀❀❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# ஆயிரம் காலத்துப் பயிர்

60 வயதிற்கு மேலானவர்கட்கு ஆயிரம் அனுபவங்கள் இருக்கும். எல்லா வகுப்புகளிலும் முதலாக வந்தவன் நல்ல வேலைக்குப் போய் சிறப்பாக இருப்பது ஒரு அனுபவம். படாதபாடுபட்டு வயதானபின் திருமணமாகி அன்பான குடும்பம் நடத்துவது நல்லதும், கெட்டதும் கலந்துள்ள அனுபவங்கள், எந்தப் பெரிய நல்லது நடந்தாலும் பின்னாலேயே ஒரு சிறு குறை ஏற்படுவது, அல்லது ஒரு பெரிய குறை ஏற்படுவது. சிறியதாக ஆரம்பித்துப் பெருமுயற்சி செய்து பெரியதாக வந்தது மற்றோர் அனுபவம். நாடு முன்னேறும்பொழுது கூடவே நமக்கும் முன்னேற்றம் வருவது. வெறும் மனிதனெல்லாம் பெரும்புள்ளியாகும்பொழுது எதுவும் கூடிவாராத அனுபவம் போன்றவை பல. இவற்றிலிருந்து மாறுபட்ட அனுபவம்,

“படிப்பு, திருமணம், வேலை, வெளிநாட்டுப் பயணம், பெரிய வேலைகள், குடும்பம், குழந்தைகள்என என் பெரிய மகனுக்கு நான் செய்ய முயன்றனவெல்லாம் முயற்சி எடுக்கும்முன் கூடிவந்து, பெருகி, பல நிலைகளாக வளர்ந்து, அனைவரும் பெருமகிழ்வு கொண்டது போன்ற நிகழ்ச்சியை நான் பார்த்ததில்லை” என அரிபொருளாக நாம் கேள்விப்படுவதுண்டு. ஆரம்பத்தை நினைவுகூர்ந்தால் அங்கு சம்பந்தப்பட்ட அனைவரும் உயர்ந்த நல்லெண்ணத்தால் செயல்பட்டிருப்பது தெரியும். “இது அனைவரும் பிரியப்பட்டு செய்தது, இந்த விஷயத்தில் கோணல், குறைஎன்ற பேச்சுக்கே இடமில்லை” என்று அன்று அனைவரும் பேசியது நினைவு வரும்”.

- ✡ **நிறைவான நல்லெண்ணம் ஆயிரம் காலத்திற்கும் பயிராகும் பெரும் பலனாக வரும்.**
- ✡ **நல்லெண்ணம், தெய்வீக சக்தி.**
- ✡ **குறை என்பவரேயில்லைஎன்பது கிடைக்க அன்னை அருள் தேவை.**
- ✡ **அன்னையை அருளாக அறிந்து ஏற்று, எவர்மீதும் நமக்குக் குறையில்லாவிட்டால், எவரும் குறையின்றி நிகழ்ச்சியில் பங்குகொள்வர்; அது வெறும் பயிரை ஆயிரம் காலத்துப் பயிராக்கும்.**

❀❀❀

# நடக்காதவை நடக்கின்றன

சத்தியஜீவிய சக்தி புவியில் வந்தால் மரணம் அழியும்; தீமை, கொடுமை கரையும்; மரணப்படுக்கையிலுள்ளவர் எக்காரணமுமின்றி பிழைத்துக்கொள்வார்; எதிரி மனம்மாறி எதிர்பாராமல் நடப்பான் என்றெல்லாம் பகவான் ஸ்ரீ அரவிந்தர் எழுதியதை சாதகர்கள் புரிந்துகொண்டார்கள். அவர் கூறியபடி 100 பேரோ, 12 சாதகர்களுடைய தவத்தால் அது நடக்கவில்லை. பகவான் உடலை நீத்து சூட்சும உலகில் தவத்தைத் தொடர்ந்ததால் அது 1956இல் புவியில் இறங்கி, படிப்படியாய் வளருவதாக அன்னை கூறினார். அதன் விளைவாக சர்வதேச அரங்கிலும், சாமான்ய மனித வாழ்விலும் நடக்காதவை நடப்பதை நாம் காண்கிறோம். பல முறை எழுதியவற்றை மீண்டும் இந்த சந்தர்ப்பத்தைக் கூற எழுதுகிறேன்:

- ✡ *குழந்தைகள்* **பள்ளிக்கூடம் போக** *ஆர்வமாக அடம்பிடிக்கிறார்கள். லீவு வந்தால் ஏமாற்றமடைகின்றனர்.*
- ✡ *பணம் ஏழையைக் கடன் பெறும்படி வருந்திக் கேட்கிறது.*
- ✡ *ஏழைகளுக்குக் கொடுத்த பணம்* **ஒருவர் தவறாமல்** *திருப்பித் தருகிறார்.*
- ✡ *ஓய்வுபெற்றபின் முழுச்சம்பளமும் ஓய்வு வயதுவரை மொத்தமாக இன்றே கையில் கொடுத்து* golden shake *என வழி அனுப்புகிறார்கள்.*
- ✡ *பள்ளிக்கூடங்களில் 5 வகுப்புவரை பரீட்சையில்லையென சட்டம் வருகிறது.*
- ✡ **ஒரு பேப்பர் கிளிப்பிற்குப்பதிலாக இரண்டு மாடி வீடு வருகிறது** *.
- ✡ *போன் பேச கட்டணமில்லை. லண்டனுக்குப் பேசினாலும், கலிபோர்னியாவுக்குப் பேசினாலும் கட்டணம் (சில கம்பனி போன்களில்) ஒரு பைசாகூட இல்லை.*

❀❀❀

---

* See article on page Nos.63–64.